# தமிழரசு

16.2.1995 ரூ.3






# எட்டாம் உலகத் தமிழ் மாநாடு

## கலை நிகழ்ச்சிகளில் சில...













## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை (15)

பெய்யாமல் வாழ்வைக் கெடுக்கவல்லதும் மழை; மழை இல்லாமல் வளம் கெட்டு நொந்தவர்க்குத் துணையாய் அவ்வாறே காக்க வல்லதும் மழை ஆகும்.


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு: 2026

மாசித் திங்கள்: 4


மலர்: 25 இதழ்: 16

16.2.1995

விலை: 3


# இந்த இதழில்...


- 'சிட்கோ' வெள்ளி விழா . . . . . . . . 2
- நீதித் துறையில் மற்றொரு மைல்கல் . . . . . . . . . . . 11
- தமிழும் அறிவியலும் மருத்துவமும். 12
- இலக்கியப் பெருமை . . . . . . . . . . 16
- சீனாவில் சிவன் கோயில்! . . . . . . . 17
- தமிழும் அறிவியலும். . . . . . . . . . 19
- நிழல் விழாக் கோபுரம் (கவிதை) . . 24
- நூல் நயம். . . . . . . . . . . . . . . 26
- புத்தாண்டுச் சிந்தனைகள் . . . . . . 27
- தாயகம் செல்ல விரும்பும் இலங்கைத் தமிழர்க்கான சலுகைகள் . . . . . . 29
- தமிழ் ஆட்சி மொழி . . . . . . . . . . 31
- ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்க மாண்புமிகு முதல்வர் ஆணை . . . 33
- உலகப் பொது மொழி . . . . . . . . . 36
- தமிழகத்தில் புதியதோர் பொற்காலம் 39
- படமும் செய்தியும் . . . . . . . . . . . 41
- அரசின் சாதனைகளை விளக்கும் அற்புதப் பொருட்காட்சி . . . . . . . 42
- திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில், அரசின் சாதனைகள், திட்டங்கள் விளக்கிடும் பல்துறைப் பணி விளக்க முகாம் . . . . . . . . 47



# 'சிட்கோ' வெள்ளி விழா!

## 85,000 பேருக்கு வேலைவாய்ப்பு தரும் புதிய தொழில் திட்டங்கள்: மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பு

**85** ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புத் தரும் புதிய தொழில் திட்டங்களை- சென்னை, கிண்டியில் உள்ள தொழிற் பேட்டையில் மாண்புமிகு தமிழக முதல மைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 1.2.95 அன்று தொடங்கி வைத்தார். அப்போது சிறு தொழில்கள் தொடங்க ஆயிரம் ஏக்கர் நிலம் ஒதுக்கப்படும் என்று அவர் அறிவித்தார்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) வெள்ளி விழாவை யொட்டி ரூ.54 கோடி செலவிலான பல்வேறு தொழில் செயலாக்கத் திட்டங்கள் தொடங் கப்பட உள்ளன.

**மின்னணுத் தொழில் வளாகம்**

1. ரூ.5 கோடியில் கிண்டி தொழிற்பேட்டையில் "டாக்டர் ஜெயலலிதா மின்னணு" தொழில் வளாகம்.

2. ரூ.4.50 கோடியில், கிண்டி தொழிற் பேட்டை அருகே "டாக்டர் ஜெயலலிதா ஆயத்த ஆடைகள் (ரெடிமேடு உடைகள்) தயாரிப்பு வளாகம்".

3. பர்கூரில் ரூ.4.50 கோடி செலவில் ஜெயலலிதா பெயரிலான பெண்கள் தொழிற்பேட்டை.

4. தஞ்சையில் ரூ.5.50 கோடியில் ஜெயலலிதா பெயரில் தொழிற்பேட்டை.

5. தமிழ்நாடு முழுவதும் ரூ.34.50 கோடி மதிப்பீட்டில் உருவாகி வரும் 525 தொழிற் கூடங்களின் செயலாக்கத் திட்டங்கள்.

– தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன 'சிட்கோ' வெள்ளி விழாவை, மாண்புமிகு



தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் குத்து விளக்கு ஏற்றித் தொடங்கி வைத்தார்.

அப்போது மங்கல இசை முழங்கியது. சிட்கோ வளர்ச்சி பற்றி, இசை அமைப்பாளர் விசுவநாதன், ராமமூர்த்தி குழுவினரின் இசை நிகழ்ச்சி நடந்தது.

அதன்பிறகு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மின்னணு வளாகத்தையும், ஆயத்த ஆடை வளாகத்தையும், 54 கோடி ரூபாய்க்கான செயலாக்கத் திட்டங்களையும் தொடங்கி வைத்தார்.

விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:

## சிறு தொழில்களுக்குத் தனித்துறை

ஒரு காலத்தில் துவண்டு கிடந்த தமிழகத் தொழில் துறை, இன்று புத்துயிர் பெற்று, புதிய வளர்ச்சிப் பாதையில், வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கிறது.

மனிதவளம் மிக அதிகமான அளவில் அமைந்துள்ள இந்தியா போன்ற நாடுகளில், குறைந்த முதலீட்டில் அதிக வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய சிறு தொழில்கள் நாட்டின் ஒட்டுமொத்தத் தொழில் வளர்ச்சியில், பெரும் பங்கு வகிக்கின்றன. இந்தக் கருத்தின் அடிப்படையில்தான், உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு உங்கள் அரசு. பெருந்தொழில்கள் மட்டுமின்றி, சிறு தொழில்கள் வளர்வதற்கு உகந்த சூழ்நிலைகளைத், தமிழ்நாட்டில் ஏற்படுத்துவதற்கு, அனைத்து ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டது. குறிப்பாக, வளர்ச்சி குன்றிய பகுதிகளில் பரவலான தொழில் வளர்ச்சி, மற்றும் வேலைவாய்ப்புப் பெருக்கம் போன்ற, இரட்டைக் குறிக்கோள்களை அடைவதற்காகச் சிறு தொழில்களுக்காகத் தனி அரசுத் துறை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெரிய தொழில்களும், சிறு தொழில்களும், ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று உறுதுணையாக நின்று, ஒருங்கிணைந்த முறையில் வளர வேண்டும் என்பதில், எனக்கு உறுதியான ஈடுபாடு உண்டு. அந்த உணர்வுடன் தான், பல்வேறு புதிய சலுகைகள், மானிய உதவிகள், செயல்முறைத் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்தி வருகின்றோம். அதன் விளைவாக இன்று, சிறுதொழில் வளர்ச்சியில், ஒரு புதிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை எண்ணி, நான் மகிழ்ச்சி அடை

கின்றேன்.

ஊரகத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள் ஆகிய வற்றின் வளர்ச்சி, இன்றியமையாதது என்ப நால்தான், இந்தத் தொழில்களின் முன் னேற்றத்திற்கு அரசு, ஊக்கமும் ஆதரவும் அளித்தது. கிராமப்புற மக்களின் பொருளா தார வாழ்க்கையில், ஒரு புதிய முன்னேற்றம் ஏற்படுவதற்கு, இந்த முயற்சிகள் ஊன்று கோலாக விளங்கி வருகின்றன.

கிராமப்புறங்களில் மட்டுமின்றி, நகர மற்றும் புறநகர்களில், ஆடவருக்குச் சரிநிகர் சமானமாக மகளிரும் சிறுதொழில்களில் ஈடுபட்டு, தங்களது திறமைகளை வெளிப் படுத்தி வருகின்றனர். நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்க்கைத் தரம் உயர்வதற்குப் பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரு கின்றன என்பதையும் மகிழ்ச்சியுடன் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில், அதிக அளவில் முதலீடு தேவைப்படும் பெருந் தொழில்களைத் தொடங்குவதற்கு முன்வரும் வெளிநாட்டினர், தமிழகத்தில் நிலவும் பல்வேறு சாதகமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க விருப்பத்துடன் முன் வருகின்றனர்.

ஆனால், இந்த உண்மை நிலையை மறைத்து தமிழகத் தொழில் துறையில் பின்னடைவு என்று, சிலர் பொய்ப் பிரச் சாரம் செய்து வருவது வருந்தத்தக்கச் செய லாகும். இதற்குக் காரணம், அரசியல் மாச்

# தமிழ்ப் பணியில் தஞ்சைத் தரணி !

தஞ்சையைச் செம்மையுடன் ஆண்ட சோழ மன்னர்களும், மராட்டிய மன்னர்களில் ஒரு வரான சரபோஜி மகாராஜாவும், மடாலயத் தாரும் தேமதுரத் தமிழ் மொழிக்குப் பல சீரிய பணிகள் புரிந்துள்ளனர்.

"சரஸ்வதி மகால்" என்னும் அறிவாலயத்தில் சரபோஜி மகாராஜா, பல அரிய ஓலைச் சுவடி களைச் சேகரித்து ஒரு நூல் நிலையத்தையே உருவாக்கினார். இந்நூல் நிலையத்தில் 16,000 ஓலைச் சுவடிகளும், 24,000 காகிதச் சுவடிகளும் உள்ளன. இந்தச் சுவடிகள் பாதுகாக்கப் பட்டு, அவற்றை ஆராய்ந்து தொகுக்கப்பட்டு வருகின்றன.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளால் தொடங்கிவைக்கப் பட்ட திருவாவடுதுறை மடாலயத்தினர் சைவ சமயத் தொடர்பான பல நூல்களை ஆராய்ந்து அச்சிடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இம் மடாலயத்தில் தான் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் ஆகியோர் தமிழ்த் தொண்டு புரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட தருமபுர ஆதீன மடாலயத்தில் 500க்கு மேற்பட்ட அரிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இது தமிழ்க் கல்லூரி ஒன்றினையும் நிறுவியுள்ளது. இதேபோன்று திருப்பனந்தாள் மடத்தினரும் தமிழ்த் தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

கருந்தட்டான் குடியில் திரு உமாமகேஸ் வரனார் அவர்களால் 1911இல் தொடங்கப்பட்ட "கரந்தைத் தமிழ்ச் சங்கம்" இன்றும் இனிதே இயங்கி வருகிறது.

1981-இல் தமிழக அரசால் நிறுவப்பட்ட தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நாளும் நற் பணியாற்றி வருகின்றது. மொழி, இலக்கியம், ஆராய்ச்சி தமிழ்நாட்டுப் பழங்கலைகள் குறித்து ஆய்வு செய்து அவற்றை நூலாகவும் வெளி யிட்டு வருகின்றது. மேலும், பழைய ஓலைச் சுவடிகளை அகராதிகளாக வெளியிட்டும், அறிவியல் களஞ்சியம் பதிப்பித்தும், தமிழ்ப் பண்பாடு பற்றி ஆராய்ந்தும், அருங்காட்சியகம் அமைத்தும், உலகின் பல இடங்களில் வாழும் தமிழர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் உறவை வளர்த்தும் உறுதுணையாக இருந்து வருகின்றது.

இவ்வாறு தஞ்சைத் தரணி, தமிழ்த் தரணியாக விளங்கி வருகின்ற பாங்கினைப் பார்க் கின்றோம்.

சர்யங்களால் எழுந்துள்ள காழ்ப்புணர்ச்சி தான்.

**வேலைவாய்ப்பு**

இன்று 54 கோடி ரூபாய் மதிப்பில் 9 புதிய திட்டங்களைத் துவக்கி வைத்ததிலும், அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தப் புதிய தொழில் முயற்சிகளின் விளைவாக 17 ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 68 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்பதையும், நேரடி வேலைவாய்ப்பில் 60 சதவிகிதம் மகளிருக்கென உருவாக்கப்படும் என்பதை அறியும்போதும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**திறமையான விஞ்ஞானிகள்**

தனியார் மயமாக்கலும், தாராளமயமாக்கலும் இன்று தொழில் துறையின் அடிப்படைகளில் மாபெரும் மாறுதல்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு புதுமையான சூழ்நிலையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே திறமை வாய்ந்த அறிவியல், மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டுள்ள தமிழ்நாடு, அகில உலக அளவில் தனக்கென்று ஒரு தனி இடத்தை ஏற்படுத்திக் கொள்கின்ற வாய்ப்புகள் மிகப் பிரகாசமாக உள்ளன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக, மின்னணுத் துறையில் வளர்ந்து வரும் உலக நாடுகளுக்கு இணையாக வளர்ச்சி பெறுவதற்குத் தமிழகத்தில் திறமையுள்ள விஞ்ஞானிகளும், அனுபவம் மிக்க தொழில்நுட்ப வல்லுநர்களும் துடிப்புள்ள தொழில் முனைவோர்களும், பெருமளவில் உள்ளனர். அவர்களின் திறமையையும் தொழில்நுட்ப அறிவையும் ஆக்கபூர்வமான செயல்களில் திசை திருப்பி விடுவதற்கு, மேற்கொள்ளப்பட்ட ஒரு சீரிய முயற்சி தான், இந்த "அடுக்குமாடி மின்னணுத் தொழில் வளாகம்".

இந்த மின்னணுத் தொழில் வளாகத்தில் மருத்துவத் துறைக்கான அதிநவீன மின்னணுக் கருவிகள், புதிய தலைமுறை கணிப்பொறி உபகரணங்கள், தொலைத் தொடர்பு

# தனித்துத் தோன்றிய மொழி!

—"சங்கநூற் கட்டுரைகள் அல்லது பழந்தமிழர் நாகரிகம்" என்னும் நூலில் திரு இளவழகனார்.

தமிழ் என்னும் பெயரிலிருந்தே 'தமிழ் மக்கள்' என்னும் பெயரும் 'தமிழ் நாடு' என்னும் பெயரும் தோன்றியிருக்கின்றன என்பது தெரிகின்றது.

இனி, இந்நாட்டு மக்கள் வழங்கிய மொழிக்குத் 'தமிழ்' என்னும் பெயர் முதலில் எப்படி வந்தது என்பதும் இங்கே சிறிது நினைவுகூர்வது நல்லது. 'தமி' என்னும் சொல்லுக்குத் தனிமை என்பது பொருள். தமிழுக்குச் சிறப்பெழுத்தாக உள்ள 'ழ்' என்னும் ஓர் இடையின எழுத்தைத் 'தமி' என்பதனோடு சேர்த்துத் 'தமிழ்' என்று முன்னோர் வழங்கினரென்று தெரிகின்றது. 'வேறொரு மொழியிலிருந்து தோன்றாமல் தனித்துத் தோன்றிய' தென்பது அதற்குப் பொருள்.

மனிதப்பிறவி முதன்முதலாகத் தோன்றிய பின் பல காலம் வரையில் மொழி தோன்றவில்லை. அதன் பின்பு, ஒரு மொழி தோன்றியிருக்க வேண்டும். முதன்முதலாகத் தோன்றிய மொழியாதலால், அந்த மொழி வேறொரு மொழியிலிருந்து தோன்றியிருக்க இடமில்லை. தனித்தே தோன்றியிருக்க வேண்டுமென்று தெரிகின்றது. பின்பு அதனை வழங்கிய மக்கள் பல வேறிடங்களுக்குஞ் செல்ல, அதிலிருந்து உலகமெங்கும் பல வேறு மொழியினங்கள் தோன்றிக் கிளை வாங்கி விரிந்தன என்பது தெளியப்படும். ஆதலால், பின்பு தோன்றிய மொழிகளோடு முதலில் தோன்றிய தாய்மொழியை நினைத்துப் பார்த்த அறிஞர்கள் அம் முதல் மொழியைத் 'தனித்துத் தோன்றியது' என்னுங் கருத்தில், 'தமிழ்' என்று வழங்கி மகிழ முற்பட்டனர்.

## பழம்பெரும் தமிழ் இசைப் பாடல்களைப் புத்தகங்களாக வெளியிட மாண்புமிகு முதல்வர் ஆணை



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழ் மொழியில் பல்வேறு இசை வல்லுநர்கள் அருளித் தந்த கீர்த்தனைகளைப் புத்தக வடிவில் அச்சிட்டு, இசை பயில்வோர்க்கு வழங்குவதற்கும் எதிர்காலச் சந்ததியினர் தமிழ் இசையின் பெருமையை உணர்வதற்கும் வழிவகுக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்.

காரைக்கால் அம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் அருளிச் சென்ற தேவாரத் திருப்திகங்கள், ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்த பாசுரங்கள், அருணகிரிநாதரின் திருப்புகழ், சீர்காழி முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப்பிள்ளை ஆகியோரின் இசைப் பாடல்களும் குறிப்பிடத் தக்கவையாகும்.

இந்திய இசை வரலாற்றிலேயே ராக, தாள அமைப்புகளுடன் கூடிய பண்களில் மிகவும் பழமையானது தேவாரம் ஆகும். அவை இசை வடிவங்களுடனேயே தோன்றின. தென்னக இசையின் தாய் காரைக்கால் அம்மையார் முதன் முதலில் பண் மற்றும் வர்ண மெட்டுக்களோடு கூடிய பாடல்களுடன் வழங்கிய "திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்", ''அற்புதத் திருவந்தாதி'', ''திருவிரட்டை மணிமாலை" ஆகிய நூல்கள், திராவிட இசைக்கு அடிப்படையாக விளங்குகின்றன. காரைக்கால் அம்மையார் தான் 'இந்தளம்', 'நட்ட பாடை' ஆகிய பண்களைத் திராவிட இசைக்கு வழங்கியவர் ஆவார்.

பழம்பெரும் இசைப் பாடல்களையும், கீர்த்தனைகளையும் தொகுத்து, அப்பண்களின் சுரம், தாளம் ஆகியவைகளைப் புத்தகங்களாக வெளியிடுவதற்கு, தமிழ்நாடு அரசின் இசைக் கல்லூரியின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். அவ்வாறு அப்பாடல்களைப் புத்தக வடிவில் வெளியிடுவதன் மூலம், வருங்காலச் சமுதாயத்தினருக்கு மிகப் பழமையான இசைப் பாடல்கள் கிடைக்கின்ற வாய்ப்பு ஏற்படும் என்பதால், இத்திட்டத்தினை விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

---

உபகரணங்கள் போன்றவை தயாரிக்கப்படும். வளர்ந்து வரும் நாடுகள் தங்களது "கம்ப்யூட்டர் சாப்ட்வேர்"களை இந்தியாவில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்கின்ற ஒரு எதிர்பார்ப்புடன் செயல்படுகின்ற, ஒரு சாதகமான சூழ்நிலையை, நாம் முழுமையாக பயன்படுத்திக் கொண்டாக வேண்டும். இந்த மின்னணுத் தொழில் வளாகத்தில் தயாரிக்கப்படும் "ஹார்டுவேர்" மற்றும் "சாப்ட்வேர்" சாதனங்கள் தமிழகத்தின் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரிக்கும் என்று நம்புகிறேன்.

**பெண்களுக்கு முன்னுரிமை**

இந்த வளாகத்தில் உள்ள தொழில்கூட ஒதுக்கீட்டில், படித்த திறமையுள்ள மகளிருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் நாலரைக் கோடி ரூபாய் செலவில், 120 தொழிற்கூடங்களுடன் கட்டப்பட்டுள்ள இந்த அடுக்குமாடிக் கட்டட வளாகத்தைத் திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த வளாகத்தில் அனைத்து அடிப்படை வசதிகளும், செய்து தரப்பட்டுள்ளன. மேலும் தொலைபேசி, தொலைத் தகவல், "பேக்ஸ்" போன்ற தொலைத் தொடர்புச் சாதனங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளும் வகையில்,

அமைத்துத் தரப்பட உள்ளன. 3 ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 12 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் ஏற்படுத்தித் தரும். இந்தத் தொழிற்கூடங்களைப் பயன்படுத்தும், தொழில் முனைவோர்களுக்குத் தமிழக அரசின் 20 சதவிகித மானியமும், 9 வருடங்களுக்கு விற்பனை வரி ஒத்தி வைப்புச் சலுகையும், கிடைக்கும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆயத்த ஆடைகள்

ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தொழிலுக்காக, முதன் முறையாக, அடுக்குமாடிக் கட்டட வளாகம் ஒன்று 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

சிறுதொழில் நிறுவனங்கள் மூலம் ஏற்றுமதித் தரத்தில் ஆடைகள் தயாரிக்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு, 64 தொழிற்கூடங்கள் கொண்ட இந்த வளாகம், ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று உறுதியாக நம்புகிறேன்.

குறுந்தொழில்களின் வளர்ச்சிக்குப் புதிய உத்வேகம் ஏற்படுத்த அந்தத் தொழில்களில் ஈடுபடுவோரின் தேவைகளுக்கேற்ப, ஒரு தொழிற்பேட்டையை "சிட்கோ" நிறுவனம் ஏற்படுத்தி, ஒரு புதிய பாதையை வகுத்துத் தந்துள்ளது பாராட்டுதற்குரிய செயலாகும். அனைத்து அடிப்படை வசதிகளுடன், அம்பத்தூரில் அமைக்கப்பட்டுள்ள 55 குறுந்தொழிற்கூடங்கள், சென்னைப் புறநகர்ப் பகுதி சிறுதொழில் முனைவோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதை எண்ணி, மகிழ்ச்சி அடைகிறேன்.

தஞ்சாவூர், நாஞ்சிக்கோட்டையில், 27 ஏக்கர் நிலப்பரப்பில், 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலும், பர்கூரில் 37 ஏக்கர் நிலப்பரப்பில் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலும், மகளிருக்கான பிரத்யேகத் தொழிற்பேட்டைகளை அமைக்க, அடிக்கல் நாட்டியதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழகத்தில் மிக அதிகமாக மகளிர் சுயதொழிலில் ஈடுபட வழிவகுக்கும் இந்தத் தொழிற்கூடங்கள், மற்ற மாநிலங்களுக்கு, ஒரு முன்னுதாரணமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழகத்திலுள்ள 16 தொழிற்பேட்டைகளில் 30 கோடி ரூபாய் செலவில் கூடுதலாக 470 தொழிற் கூடங்கள் அமைக்கத் திட்ட

## முதலமைச்சர் ஆணைப்படி மின்வசதி

**ஆ**திதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பழங்குடியினரின் நலனுக்காகவும், அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், மட்டும் "பழங்குடியினர் துணைத் திட்டம்" என்ற ஒரு திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பழங்குடியினரின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், "பழங்குடியினரின் துணைத் திட்டத்தின்" கீழ் (நடைபெறும் நிதியாண்டில் 1994-95-ஆம் ஆண்டில்) சேலம் மாவட்டம் கொல்லிமலையிலுள்ள 6 சிற்றூர்களுக்கு மின் வசதி அமைத்துக் கொடுப்பதற்கு ஏதுவாக, அரசு தரப்பிலிருந்து 28.50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

இராசிபுரம் வட்டத்தில் அமைந்துள்ள செம்பூ, மூடுபள்ளி, கல்லேரி, கம்பபாடி, அக்கறைவளவு, மற்றும் மூலசோலை ஆகிய சிற்றூர்களுக்குத் தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலமாக இந்த நிதியாண்டில் (1994-95-ஆம் ஆண்டில்) மின்வசதி அளிக்கப்பட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

## திருக்குறள்

"திருக்குறள் வாழ்வுக்கு ஆக்கம் தரும் மெய்ம்மைப் பொருளைக் கூறுவது, மற்றப் பொய்மைச் சிறுமைகளைக் கூறுவதன்று; இத்தகைய ஒரு நூல் ஓர் இனத்தாருக்கு மட்டும் உரியதாகாது. அது மன்பதைக்குரிய பொதுமையது. திருக்குறள் தமிழ் மொழியில் பிறந்த ஒரு பெரும் பொது மறை. உலகைக் கூறு படுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப் படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன."

**–தமிழ்த் தென்றல் திரு.வி.க.**

"தமிழ் நூல்களுள் மிகவும் சிறந்த நூலாக எல்லோராலும் மதிக்கப்படும் திருக்குறள் அமைப்பிலும், யாப்பிலும், வடமொழித் தொடர்பு சிறிதுமில்லாமல் தனிச் சிறப்புடன் அமைந்துள்ளது".

**–அறிஞர், ரைட் ரெவரெண்டு ராபர்ட் கால்டுவெல்**

"திருக்குறள் தமிழ் நூல்களெல்லாவற்றிலும் தான் உயர்ந்து நிற்கின்றது. ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தினுள்ளே - உயிரிலே இடங்கொண்டு என்றென்றும் அழியாது விளங்கும் ஒரு சில பெரு நூல்களில் ஒன்று".

**–அறிஞர், ரெவரெண்டு ஜீ.யூ. போப்.**

மிடப்பட்டுள்ளது. மேலும், தொழில் முனைவோர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அனைத்து அடிப்படை வசதிகள் கொண்ட அலுவலக வளாகம் ஒன்று, 3 கோடி ரூபாய் செலவில், விரைவில் அமைக்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிக ரீதியாகத் தேவைப்படும் அத்தனை அலுவலக வசதிகளையும் ஒரே இடத்தில் இந்த வளாகத்தில், ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், தமிழகம் எப்போதுமே, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் ஒரு மாநிலமாக விளங்கும் என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டுவோம்.

தமிழகத்தில் சிறுதொழில் வளர்ச்சியில், "சிட்கோ" நிறுவனம் ஆற்றி வருகின்ற சீரிய பணிகளை இந்த வெள்ளிவிழா ஆண்டில் நினைவுகூர்ந்து, எனது மனமார்ந்த பாராட்டுதல்களை, உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தொழிற்கூடங்கள் அமைத்தல், மற்றும் பராமரித்தல், தனியார் தொழிற்பேட்டைகள் அமைக்க ஆலோசனை மற்றும் உதவி, நியாய விலையில் சிறுதொழில் நிறுவனங்களுக்கு மூலப் பொருட்கள் வினியோகம், சிறு தொழில் நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களை அரசு நிறுவனங்களுக்கு விற்பதற்கு விற்பனை உதவி, தவணை முறையில் இயந்திரங்கள் கொள்முதல், இயந்திரம் மற்றும் தளவாடங்களைக் குத்தைகைக்கு விடுதல், சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்றுமதி வாய்ப்புக்களை உருவாக்கித் தருதல், போன்ற பல்வேறு பணிகளை இந்தச் சிட்கோ' நிறுவனம் சிறப்புடன் ஆற்றி வருகின்றது.

தமிழகத் தொழில் வளர்ச்சியில் ஒரு மாபெரும் பங்காற்றி வருகின்ற 'சிட்கோ நிறுவனத்திற்கும், அந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்துக்கும், நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும் இந்த வெள்ளி விழா ஆண்டில், எனது இதயங் கனிந்த, நல்வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

சைதாப்பேட்டை வட்டத்தில், அமைந்துள்ள வெள்ளானூர், பம்மதுகுளம், புத்தூர், மோரை ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள 1000 ஏக்கர் அரசு நிலம் புதிய தொழிற்கூடங்களை ஏற்படுத்துவதற்காக, சிட்கோ நிறுவனத்திற்குத் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மிகப் பெரிய நிலப்பரப்பில், சிட்கோ புதிய தொழிற்கூடங்களை ஏற்படுத்தி, சிறுதொழில் வளர்ச்சியின் புதிய அத்தியாயத்திற்கு வழி வகுக்கும் என்று, உறுதியாக நம்புகிறேன்.

தமிழகத்தில் சிறுதொழில் வளர்ச்சியின் ஒரு மைல் கல்லாக, இந்தப் புதிய தொழிற்கூடம் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழகத்தைச் சார்ந்த தொழில் முனைவோர்கள் அனைவரும் தங்கள் முழுத் திறமையைக் காட்டி தமிழக அரசு கொடுத்து வருகின்ற பல்வேறு சலுகைகளையும், மானியங்களையும் பயன்படுத்திக்கொண்டு விரைந்த தொழில் முன்னேற்றத்திற்கு வழி வகுக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, படித்த இளைஞர்கள், மகளிர், சிறுதொழில்களில் மிக அதிகமான அளவில் ஈடுபட்டு தமிழகத்தின் விரைந்த தொழில் வளர்ச்சிக்கு வழி வகுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய சூழ்நிலையில், பெருந்தொழில்கள் வளர்வதற்கு எவ்வாறு வாய்ப்புகள் பெருகி உள்ளனவோ, அவ்வாறே சிறுதொழில் வளர்ச்சியிலும் வாய்ப்புகள் பெருகி உள்ளன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். படித்த இளைஞர்களும், மகளிரும், தங்களை முழுமையாகச் சிறுதொழில் வளர்ச்சியில் ஈடுபடுத்திக் கொண்டால் தமிழகம் மேலும் ஒரு புதிய வளர்ச்சியைக் காணும் என்பதே எனது கருத்து.

இந்த இனிய விழாவில் பெருந்திரளாகக் கூடி இருக்கின்ற உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொண்டு, நீங்கள் எல்லா வளமும், நலமும் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழாவுக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன (சிட்கோ) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திருமதி ஈ.வே.கி.சுலோசனா சம்பத் அவர்கள் வரவேற்றுப் பேசினார். "நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்- தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோர் வழிநடந்து, ஆட்சியில் பல அற்புதங்களைப் படைத்து வருகிறார்" என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் திருமதி ஈ.வே.கி.சுலோசனா சம்பத் அவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கினார்; முதல் அமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ.25 இலட்சம் நன்கொடை வழங்கினார். "சிட்கோ" வெற்றி விழாவையொட்டி அந்நிறுவனம் சார்பில், அவ்வை இல்லத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கு இலவசச் சீருடை, சிறப்பாகச் சேவை செய்த "சிட்கோ" ஊழியர்களுக்கு அரைப் பவுன் தங்கக் காசு, 1000 ரூபாய் பணம் ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

விழாவில் இசை நிகழ்ச்சி நடத்திய விசுவநாதன் இராமமூர்த்தி, நாட்டியம் நடத்திய சந்திரா தண்டாயுதபாணி குழுவினர் மாண்புமிகு முதல்வர் அவர்களைப்


# தமிழே தொன்மையான முதன்மையான மொழி!

**வி**ன்சுலோ எனும் ஐரோப்பிய அறிஞர் 1862-இல் ஒரு தமிழகராதியைத் தொகுத்து வெளியிட்டார். அவ்வகராதியின் முன்னுரையில், "தமிழ் ஒரு கொச்சை மொழியன்று. ஆங்கில மொழி எழுத்துவடிவம் பெறுவதற்கு முன்னரே தமிழ் மிகுந்த பண்பட்ட மொழியாக விளங்கியது. அதன் பெயரே இனிமையைக் குறிக்கிறது. தெலுங்கு மொழியளவிற்கு இசையினிமையுடைய தன்றாயினும் குறிப்பாக அதன் பா வடிவில் இன்னோசைக் கவர்ச்சியும், இனிமையும் பெற்றுள்ளன.

சிலர் கருதுவதுபோல இந்தியாவில் சில மொழிகளைப் போன்று அது சமஸ்கிருதத்தின் சேயன்று. அதன் இலக்கணம் சமஸ்கிருதத்தோடு ஒத்திருப்பினும் அம்மொழியின் தனித் திறம் அதனைப் பெரிதும் வேறுபாடுடையதாக வைத்துள்ளது.

ஏறத்தாழ இந்தியாவின் எல்லா மொழிகளும் சமஸ்கிருதத்தால் பெருவளம் பெற்றிருக்கும்போது, அவ்வியத்தகு மொழி திராவிட மொழிகளிலிருந்து கூடக் கடன்பெற இணங்கவில்லை. திராவிட மொழிகளில் தமிழே தொன்மையான முதன்மையான மொழியாகும்.

**—ஆதாரம் 'தனித்தமிழியக்கம்'— முனைவர் கு.திருமாறன்.**



பாராட்டிப் பாடி நடனம் ஆடிய கிருஷ்ண குமாரி நரேந்திரன் குழுவினர்- பாடல் இயற்றிய கவிஞர் தஞ்சைவாணன், கிராமியக் கலை நிகழ்ச்சி நடத்திய விஜயலட்சுமி நவநீத கிருஷ்ணன் ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் நினைவுப் பரிசு வழங்கினார்.

'சிட்கோ' வளர்ச்சியைப் பற்றித் திருமதி சுலோசனா சம்பத் அவர்களின் வர்ணனை யுடன் எடுக்கப்பட்ட திரைப்படத்தை அங்கு கம்ப்யூட்டர் திரையில் திரையிட்டுக் காண பித்தனர். அதை மேடையில் இருந்தவாறே 10 நிமிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைப் பார்த்தார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு துரை ராமசாமி அவர்கள் விழாவில் பேசும்போது கூறியதாவது:

"முதல் அமைச்சர் புரட்சித்தலைவி ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு புதிய தொழில் கொள்கைகளை அறிவித்துப் பல சலுகைகள் வழங்கியதால் தமிழ்நாட்டில் பல தொழிற்சாலைகள் வர வாய்ப்பு ஏற்பட்டது.

தமிழகம் தொழில் துறையில் 13-வது இடத்தில் இருந்தது. புரட்சித்தலைவியின் அரசு பல்வேறு சலுகைகள் வழங்கி ஊக்கு வித்ததால், 3-வது இடத்துக்குத் தொழில் துறை வந்துள்ளது. இன்னும் ஓரிரு ஆண்டு களில் இந்தியாவிலேயே தொழில் துறையில் தமிழகம் முதன்மையானதாகத் திகழக்கூடிய அளவுக்கு அரசு மூலம் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் சிறு தொழில்களைத் தொடங்குவோம் என்று சட்டசபையில் அறிவித்தோம். 3 1/2 ஆண்டுக் காலத்தில் 85 ஆயிரம் சிறு தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுவிட்டன. இந்த வேகத்தைப் பார்க்கும்போது இலக்கு நிர்ணயித்ததற்கு மேலாகத் தமிழ்நாட்டில் சிறுதொழில் வளர்ச்சி அடையும் நிலை ஏற்பட்டு இருக் கிறது.

—இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் திரு துரை ராமசாமி அவர்கள் பேசினார்.

தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு சி. இராமச்சந்திரன் அவர்கள் நன்றி கூறினார்.



# நீதித்துறையில் மற்றொரு மைல்கல்!

நலிந்தோருக்கும் நீதி விரைவில் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில், தமிழக அரசு சென்ற 42 மாதங்களில் 40 புதிய நீதிமன்றங்களைத் துவக்கியுள்ளது.

குறிப்பாக, வருவாய் மாவட்டம் பிரிக்கப்படும்போது நீதி நிர்வாகப் பிரிவையும் அதேநேரத்தில், பிரிக்க வகை செய்தது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசுதான்.

நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதி குடியிருப்புகள் என்ற வகையிலும், முன்னோடித் திட்டம் என்ற வகையிலும், புதிய வசதிகளையும் தேங்கியுள்ள வழக்குகளை விரைவில் தீர்க்கவும் முனைப்பான பல நடவடிக்கைகளை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி தலைமையிலான தமிழக அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

இதன் மற்றொரு அம்சமாக, 1995-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் தொடங்கி இரண்டு மாதங்களுக்குள் தமிழகத்தின் ஏழு மாவட்டங்களில் புதிய நீதிமன்றங்கள், நீதிமன்றக் கட்டடங்கள் அமைக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ரூ. 640 இலட்சம் வழங்கி யுள்ளார்.

இவற்றில்—

1. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் வேலூர் சத்துவாச்சாரியில் நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் கட்டடம் 'பி' பிளாக் ரூ.350 இலட்சம் செலவில் கட்டத் திட்டமிடப்பட்டு, இப்பணிகள் 11.3.95 அன்று தொடங்கவுள்ளன.

2. பெரியார் மாவட்டம் தாராபுரத்தில் ரூ.124 இலட்சம் செலவில் துணை நீதிமன்றக் கட்டடமும், கோபிசெட்டிபாளையத்தில் ரூ.108 இலட்சம் செலவில் மாவட்ட நீதிமன்றக் கட்டடமும் அமைக்க அடிக்கல் நாட்டு விழா 25.2.95 அன்று நடைபெற உள்ளது. 26.2.95 அன்று கோவை நகரில் குடும்ப நீதிமன்றம் ரூ.9 இலட்சம் செலவில் செயல்படத் தொடங்கும்.

3. அனைத்து மாவட்டங்களிலும் தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்களும் அமைய வேண்டுமென்ற அடிப்படையில் 18.2.95 அன்று நாகப்பட்டினத்தில் ரூ.9 இலட்சம் செலவிலும், 11.3.95 அன்று திருவண்ணாமலையில் ரூ.14 இலட்சம் செலவிலும், 18.3.95 அன்று தூத்துக்குடியில் ரூ.16 இலட்சம் செலவிலும் தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் துவங்கப்பட உள்ளன.

4. நீதிமன்றங்களில் உள்ள ஆவணங்களை உரிய வகையில் பாதுகாப்பதற்காக, புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் 19.2.95 அன்று ரூ.10 இலட்சம் செலவில் புதிதாகப் பதிவறை ஒன்றும் திறக்கப்பட உள்ளது.

தேங்கியுள்ள வழக்குகளை விரைவில் முடிக்கவேண்டுமென்ற அடிப்படையிலும், உரிமையியல் நீதிமன்றத்திலேயே குற்றவியல் வழக்குகளையும் தீர்த்துக் கொள்ளப் புதிய வசதியையும் ஏற்படுத்தும் வகையிலும் ஒரு 'முன்னோடித் திட்டம்' (Pilot Project) தீட்டப்பட்டு, மூன்றாண்டுகளில் இதனை முழுமையாகச் செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதன் ஒரு அம்சமாக 17.10.94 அன்று முதல் 8 மாவட்டங்களில் (தர்மபுரி, கன்னியாகுமரி, வ.உ. சிதம்பரனார், நாகை காயிதே மில்லத், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், புதுக்கோட்டை மற்றும் நீலகிரி) இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு, பல்வேறு வகைகளில் புதிய வசதிகள் வழக்காடும் பொதுமக்களுக்கும், நீதித்துறைப் பணியாளர்களுக்கும் புதிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஒப்புதலளித்துள்ளது என்பது "எளியோருக்கு விரைவில் நீதி கிடைக்கச் செய்வது" என்ற கோட்பாட்டை அடைய ஒரு உந்துகோலாகும்.

# தமிழும்-அறிவியலும்-மருத்துவமும்


## பேராசிரியர் எஸ். நரேந்திரன்

**தஞ்சை மருத்துவக் கல்லூரி**


உலக நாடுகளோடு இணைந்து நமது நாடும் வளர்ச்சியை வல்லமையைப் பெற வேண்டு மானால் நாமும் இந்த அறிவியல் ஆற்றலைப் பெறவேண்டும்.

அறிவியல் ஆற்றலும், அறிவியல் கல்வியும் பெற மக்களின் முதல் தேவை மனதில் உந்து சக்தி தான். இச்சக்தியை அளிப்பதில் மொழிக்கு முக் கியப் பங்கு உண்டு.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
முன் தோன்றி மூத்த குடியினரின்"

தமிழ் மொழிக்கு - வளர்ந்துவரும் அறிவிய லுக்கு ஈடுகொடுத்து அதற்கான சொற்களைத் தானே உருவாக்கிக் கொடுக்கும் தன்மையும், சிறப்பும் நம் மொழிக்கு உண்டு. ஏனெனில், தமிழ் தொன்மை வாய்ந்த மொழி.

தமிழின் இலக்கிய இலக்கணங்களின் பெரு மையையும், சிறப்பையும் உலகம் அறியும். ஆயிரம் ஆயிரம், ஆண்டுகளாகச் சீரோடும், சிறப்போடும் வழக்கில் இருந்துவரும் நமது தாய்மொழிக்கு, அறிவியல் செய்திகளைத் தமிழில் தரும் வல்லமை உண்டு.

நமது முன்னோர்கள் தமிழில் இலக்கியம் அல் லாத மற்ற துறைகளான மருத்துவம், அறிவியல், வானியல் ஆகியவை அனைத்தையும் கவிதை களிலேயே ஆக்கி வைத்தார்கள்.

சங்கப் புலவர்களின் பாடலாக இருந்தாலும், சித்தர் பாடலாக இருந்தாலும், புலிப்பாணி மருத் துவ நூலாக இருந்தாலும், அகத்தியர் நாடி சோதிடமாக இருந்தாலும் அவை கவிதை உருவில் தான் இயற்றப்பட்டன.


இந்தக் கவிதை நூல்கள் அனைத்திலும் இன்றைய அறிவியல் கருத்துக்களுக்குச் சமமான சொற்கள் ஏராளமாக இருக்கின்றன.

எந்தக் கல்வியும் தாய் மொழி வாயிலாகக் கற்றால்தான் அக்கல்வி சிறப்புப் பெறும்.

இரண்டாம் மகாயுத்தத்தில் அழிவுற்ற ஜப்பா னும், சாதாரண விவசாய நாடான ரஷ்யாவும் அறிவியலைத் தன் தாய்மொழியில் மக்களுக்குக் கற்பித்ததுதான் இன்று அவர்கள் வானத்தைத் தொடும் அளவுக்கு முன்னேற்றம் அடைந் துள்ளனர். அறிவியல் கருத்துக்களைத் தமிழில் எழுதவேண்டும் என்ற எண்ணம் சென்ற நூற் றாண்டில்தான் தோன்றியது. அதே காலத்தில் தமிழிலும் அறிவியல் நூல்கள் வெளிவந்தன. அப்போதுதான் புதிய அறிவியல் சொற்களைப் பயன்படுத்தும் தேவை ஏற்பட்டது.

இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வட மொழியை நன்கு அறிந்தவர்கள்தான் அறிவி யலை மொழியாக்கம் செய்தபோது ஆங்கில மொழிச் சொற்களையும், வடமொழிச் சொற் களையும் அதாவது Human Anatomy என்பதை 'மனுஷ அங்காதிபாதம்' எனவும் Chemistry 'கெமிஸ்தம்' எனவும் மொழிபெயர்த்தனர்.

ஆயினும், தமிழாய்ந்த தமிழ்ப் பெருமக்கள் அறிவியலைத் தமிழில் கொண்டுவர முடியும் என் பதை உணர்த்தும் வகையில், வடமொழிச் சொற்களையும், ஆங்கிலத்தையும் ஒதுக்கித் தள்ளி விட்டு, அற்புதமான தமிழ்ச் சொற்களை உண் டாக்கித் தந்துள்ளார்கள். 'மனுஷ அங்காதிபாதம்'



இன்று உடற்கூற்றியலாகவும், Chemistry 'வேதியலாகவும்' மொழி பெயர்க்கப்பட்டு வழக்கத்தில் உள்ளது. இதன் காரணமாகப் பல அறிவியல் நூல்கள் தமிழில் வெளிவந்த வண்ணமாக உள்ளன.

மருத்துவச் சொற்களை உருவாக்கத் தமிழால் முடியும். நமது தமிழ் இலக்கியத்தால் முடியும். தமிழ் இலக்கியம் ஆழமான சுரங்கம். சுரங்கத்தைத் தோண்டினால்தான் நமக்குப் பொன்னும், மணியும் கிடைக்கும்.

தமிழ் இலக்கியச் சுரங்கத்தில் வள்ளுவர் பெருமானின் திருக்குறள் தனிச்சிறப்புப் பெற்றது. திருக்குறள் பொன்னையும் மணியையும் அள்ளி அள்ளித் தரும் அற்புதச் சுரங்கம். திருவள்ளுவர் ஒரு தலைசிறந்த மருத்துவ அறிஞர்.

திருவள்ளுவர் தலைசிறந்த மருத்துவ அறிஞர் என்பதற்கு அவர் செய்த 'மருந்து அதிகாரம்' ஒன்றே போதும். நோயைப் போக்க முக்கியமானது நோயிற்கான காரணத்தை அகற்றுவது To treat a disease fundamentaly-remove the etiology என்று மருத்துவ அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்த Etiology என்பதற்கு என்ன தமிழ்ச் சொல் என்றால்,

"நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்ற குறளில் வரும் "நோய்நாடி" என்ற சொல்லே பொருத்தமான சொல். திருக்குறள் ஒரு அறிவியல் கடல். இரத்தக் கொதிப்பு, மாரடைப்பு, நீரிழிவு, வயிற்றுப்புண், தலைவலி போன்ற நோய்களுக்கான மூலகாரணம் பெருமளவில் உள்ளத்தைச் சார்ந்ததே ஆகும். இதனைத் தவிர்க்க வள்ளுவர் கூறும் மருத்துவம் எச்சரிக்கையாய் இரு என்பது தான்.

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்பதுதான்.இது நோய் வராமல் காக்கும் தடுப்பு முறை. கோபம் கொள்ளாதே - இரத்தக்

# மக்கள் மாநாடு!

## மலேசிய நாட்டுச் செனட் பேரவைத் தலைவர் டத்தோ ஜி. வடிவேலு பாராட்டு!

“இது ஒரு மக்கள் மாநாடு என்றும், உலகத்தமிழ் மாநாட்டை நடத்தியதன் மூலம் முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், சரித்திரச் சாதனை படைத்து விட்டார் என்றும் புகழாரம் சூட்டினார் மலேசிய செனட் பேரவைத் தலைவர் டத்தோ ஜி. வடிவேலு அவர்கள்.

தஞ்சையில் நடைபெற்ற 8-வது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மலேசிய நாட்டில் இருந்து வந்த பிரதிநிதிகளுக்கு நல்ல வரவேற்புக்கொடுத்தனர்.அதற்காக முதலில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை இல்லாத அளவுக்கு இந்த உலகத் தமிழ் மாநாட்டை நடத்தித் தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா புதிய சரித்திரச் சாதனையைப் படைத்துவிட்டார்.

பல உலகத் தமிழ் மாநாடுகளில் நான் கலந்து இருக்கிறேன். ஆனால், இதுபோல் ஒரு மாநாட்டை நான் பார்த்ததில்லை. இது மாதிரி எங்களால் கூட நடத்த முடியாது.

இதற்கு முன்பு நடந்த மாநாடுகளில் எல்லாம் அறிஞர் பெருமக்களும், ஆய்வாளர்களும் கலந்துகொண்டனர். தஞ்சையில் நடந்த 8-வது உலகத் தமிழ் மாநாட்டில் பொதுமக்களே ஆர்வத்தோடு கலந்துகொண்டதை நான் பார்த்தேன்.

கலை நிகழ்ச்சிகளில் கருத்தரங்குகளில், கவியரங்குகளில், பட்டிமன்றங்களில் இசைக் கச்சேரிகளில் பெரும்பாலான மக்கள் கலந்து கொண்டதைப் பார்க்கும்போது இது ஒரு மக்கள் மாநாடாக இருக்கிறது.

அரசின் ஆதரவு இல்லாமல் இவ்வளவு சிறப்பாக மாநாட்டை நடத்த முடியாது. தமிழுக்காக இவ்வளவு செலவு செய்து இருப்பது பாராட்டுக்குரியது.

அரசியல் நோக்கத்துக்காக இந்த மாநாடு நடத்தப்பட்டது என்று பலர் சொன்னாலும், தமிழுக்காக முதல் அமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இந்த மாநாட்டை மிகவும் சிறப்பாக நடத்தி உள்ளார். இத்தகைய மிகப் பெரிய மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய முதல் அமைச்சர் அவர்கள் போற்றுதலுக்கு உரியவர்.

கொதிப்பு வராது. அளவறிந்துண் உடல் பருமனாகி கொலஸ்டிராஸ் அதிகமாகி மாரடைப்பு போன்ற பல நோய்கள் வராது. மாறுபாடு இல்லாது உண்டி மறுத்துண், அழற்சி என்ற ஒவ்வாமையை ஒடவைக்கலாம். இதுதான் தமிழரின் வள்ளுவ மருத்துவம்.

குறளில் மருந்தைப் பற்றி நேரிடையாக எங்கும் கூறவில்லை. ஆனால், யாக்கைக்கு - உடம்புக்கு என்று குறிப்பிட்டு 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு' என்கிறார்.

குறளைப் போலவே நிகண்டு, பதினெண் கீழ்க்கணக்கு, போன்ற நூல்களிலும் பல மருத்துவச் செய்திகள் அறியவருகின்றன. கம்ப ராமாயணத்தில் உடலில் ஏற்பட்ட சீழ்க் கட்டிக்கான அறுவை மருத்துவம் எவ்வாறு இருந்தது என்பதை,

"உடலிடைத் தோன்றிற்று ஒன்றை
அறுத்து அதன் உதிரம் ஊற்றிச்
சுடலுறச் சுட்டு வேறோர்
மருந்தினால் துயரம் தீர்வீர்"

எனவரும் இப்பாடலில் சீழ்க்கட்டிக்கான அறுவை மருத்துவம் நான்கு நிலைகளில் நடைபெற்றதாகக் கூறப்படுவதைக் காணலாம்.

கட்டியை அறுத்தல், கெட்ட குருதியையும் சீழையும் அகற்றல், கட்டி தோன்றிய பகுதியைச் சுடுதல், மருந்திடல் என்பன. இதேபோல் கம்பருக்கு முன் ஆழ்வார் பாடல்களும்,

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன்"

என்று இதே அறுவை மருத்துவச் சிகிச்சைக் கருத்தைத் தெளிவுறுத்துகிறது.

பெரிய புராணத்தில் Transplation Surgery மாற்று உறுப்பு மருத்துவம் கல்வி அறிவில்லாத வேடன் கண்ணப்பன் காளத்திநாதனான இறைவனின் கண்ணிலிருந்து குருதி கண்டு பதறி, மூலிகை மருத்துவங்களையெல்லாம் முறையே செய்த பின்னும் குருதியொழுக்கு நில்லாமையால் வேறு என்ன செய்யலாம் என்றெண்ணியபோது,

"உற்றநோய் தீர்ப்பது ஊனுக்கு
ஊனெனும் உணரமுன் கண்டார்"

எனவும், அம்முறையிலேயே தன் கண்ணைப் பறித்து இறைவனின் கண்ணில் அப்பிக் குருதியொழுக்கை நிறுத்தினாரெனவும் பெரிய

★ ★ ★

**இந்த உலகம் மாபெரும் பள்ளி. அனுபவம் மிகப்பெரிய ஆசிரியர். அனுபவத்துடன் பெறும் கல்விதான் சிறந்தது. அதுவே வாழ்க்கைக் கல்வி.**

**— அண்ணல் காந்தியடிகள்**

★ ★ ★

புராணத்தில் காணமுடிகிறது. இவைகளெல்லாம் தமிழ் இலக்கியம் தந்த மருத்துவக் குறிப்புகள். இவை அன்றி தமிழ் மருத்துவம் செய்தவர்களும் தேக தத்துவநூல், நோயைப் பற்றிய நூல், நோய் அணுகாவிதி, இரண மருத்துவம், உணவுப் பொருள் மருத்துவநூல், விஷங்களை நீக்கும் நஞ்சு நூல், ஞானசரநூல், ஜோதிடம் முதலிய நூல்களை எழுதி மாணவர்களுக்கு 12 ஆண்டுகள் பாடம் சொல்லித்தந்து பிறகே மருத்துவம் புரிய அனுமதித்தனர். இம்முறை இன்றுவரை பலரால் கையாளப்பட்டு வருவது நாம் அறிந்தது.

அலோபதி என்ற ஆங்கில மருத்துவம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்திற்கு வந்ததாகும். இந்த மருத்துவ இயலைப் பற்றிய நூல்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் இருந்தன. ஆகவே அவை அனைத்தும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்பட்டன.

சென்ற நூற்றாண்டில் மருத்துவ இயலைத் தமிழில் கொணர்ந்த பெருமை அமெரிக்கரைச் சாரும்.

இதேபோல் நம் நாட்டினிலும் ஜகந்நாத நாயுடு எனும் மைசூர் அரண்மனை மருத்துவரால் 1865-இல் அறுவை மருத்துவமும், திரு சீதா ராமையாவினரால் சரீர சாஸ்திரம் 1915-லும், சிதம்பரநாத முதலியாரால் செவிலியருக்கான பாடப் புத்தகம் 1920-லும் வெளியிடப்பட்டன.

இதைத் தொடர்ந்து 1924-இல் ஈஸ்வரம் பிள்ளையாலும் அதன்பின் 15 ஆண்டுகள் கழிந்து மூதறிஞர் இராஜாஜி அமைச்சரவையில் அமைச்சரான டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் அவர்களாலும், டாக்டர் நெல்சன் என்ற மருத்துவராலும், .மருத்துவப் புத்தகங்கள் எழுதப்பட்டு வெளிவந்தன.

1967-ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக் கழகம் 10 கலைக் களஞ்சியப் புத்தகங்களைக்குழந்தைகளுக்கும், 10 கலைக் களஞ்சியப் புத்தகங்களை பெரியவர்களுக்கும் வெளியிட்டு அதில் பல மருத்துவக் கட்டுரைகளையும் இணைத்தது. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமும் பல மருத்துவப் புத்தகங்களை வெளியிட்டது.

இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் மறைந்த புரட்சித்தலைவர் கண்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் 14 மருத்துவப் பாட நூல்களையும், 13 பொறியியல் நூல்களையும் வெளியிட்டுள்ளது.

முனைவர் வா செ. குழந்தைசாமியைத் தலைவராகக் கொண்ட தமிழ் வளர்ச்சிக் கழகம் 10 மருத்துவக் கையேடுகளை இக்கால மருத்துவ நிபுணர்களால் எழுதப்பட்டு, அதில் முதல் கையேடும் வெளிவந்துவிட்டது. இவைகளெல்லாம் மருத்துவத்தைத் தமிழில் சொல்ல முடியுமா? எழுத முடியுமா? என்ற கேள்விகளுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி என்றால் அது மிகையாகாது.

இந்த நிலையை நோக்கும்பொழுது, தமிழில் மருத்துவத்தைச் சொல்வதில் சிரமம் இல்லை, ஊக்கமும் முயற்சியும் தான் தேவை. மருத்துவத்தில் தமிழ்ப் பயன்பாட்டைப் பெருக்குகின்ற இந்நிலை, "தாய் மொழியில் அறிவியல் கலைகள் கற்பிக்கப்படும் காலமே தமிழ்நாட்டின் பொற்காலம்" என அறிஞர்கள் கண்ட கனவு நினைவாகி வருகிறது.

மேலும், கலைக் களஞ்சியங்களின் வாயிலாகவும், கலைக்கதிர், அறிக அறிவியல், ஹெல்த், விஞ்ஞானச் சுடர், உங்கள் உடல் நலம், நல்வழி போன்ற இதழ்கள் மூலமும் நாள்தோறும் வெளிவரும் நாளேடுகள் வழியாகவும் பல ஆண்டுகளாகப் பல மருத்துவக் கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பது நாமறிந்த உண்மை.

இப்படி இருந்தும் அறிவியலை, அதிலம் குறிப்பாக மருத்துவ இயலைத் தமிழில் எழுத தகுந்த கலைச் சொற்கள் உண்டா என்பதே ஆகும். ஆங்கிலத்தில் படிக்கப்படும் மருத்துவ நூல்களின் பெரும்பாலான சொற்கள் கிரீக்கும், லத்தீனும் ஆகும்.



கவிதை:

கவிதை எப்போது ஒரு நாட்டில் பிறக்கும்? மொழி வளர்ந்து - இலக்கியம் வளர்ந்து - அதை மக்கள் உணருகின்ற நேரத்தில் தான் தோன்றும்.

இக் கலைச் சொல்லாக்கம், ஆரம்ப நிலையில் எல்லா மொழிகளும் அனுபவித்த பிறப்பு வேதனைக் கோளாறுகளைப் போல, தமிழ் மொழியும் அனுபவித்து வருகிறது. இது தமிழில் ஒரே தரமாக ஒரு சொல்லையே எல்லோரும், எல்லா நூல்களிலும் பயன்படுத்தும் முறை மேற்கொள்ளவேண்டும். அதுவும் சிறந்ததாக இருக்க வேண்டும் எனும் வாதம், தற்போது நடைபெற்று வருகிறது. இதற்கு விடை சொல்லும் இஸ்ரேல் பல வழிகளைக் கையாண்டு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. ஒரே தரமான, எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட கலைச் சொற்கள் அங்கே பயனாகின்றன.

இஸ்ரேல் நாட்டிலும், ஜப்பான் நாட்டிலும் இம்முறை இன்றும் வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்குக் காரணம் பொதுமக்களின் ஒத்துழைப்பு. அறிஞர்களின் மெய்மறந்த ஈடுபாடு, நிறுவனத் தீர்ப்பிற்குக் கொடுக்கும் மதிப்பு ஆகியவையாகும்.

சமுதாயத்தின் தேவைக்கேற்ப மொழியிலும் புதிய சொற்கள் தோன்றுகின்றன. தமிழ் மொழி அமைப்பை உணர்ந்த மொழியில் அறிஞர்களும் பிற துறை அறிஞர்களுடன் இணைந்து செயல்பட்டால் தமிழ்க் கலைச் சொல்லாக்கப் பணி வெற்றிபெறும். சிறப்புப் பெயர்கள், குறியீடுகள், சமன்பாடுகள், வாய்பாடுகள், அனைத்துலகச் சொற்கள் ஆகியவற்றை அப்படியே எடுத்தாளுவது பொருந்தும், சாலைச் சொல்லாக்கச் சிக்கல்களை ஆய்ந்து தீர்வு காண அனைத்துத் துறை அறிஞர்களைக் கொண்ட ஒரு குழு தேவை. இத்துடன் கணிப்பொறியும் பேருதவி செய்யும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் இருமொழிக் கொள்கையில் உறுதியாக நிற்கும் நம் தமிழக அரசு, தமிழகத்தில் தமிழ் இனி கட்டாயப் பாடம் என்று அறிவித்துவிட்டது. அறிவியலால் தமிழும், தமிழால் அறிவியலும் சிறந்தோங்கி வளர ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டன. இந்த நிலையில், இயல், இசை, நாடகம், என்ற முத்தமிழ் அன்றி நான்காம் தமிழாம் அறிவியல் தமிழின் உதவியால் மருத்துவ இயல் தழைத்தோங்கும். இந்நிலையில் அறிவியல் மொழி வளர்ந்து அதன் பயன் பெருகும்பொழுது, மருத்துவத்தில் மொழிபெயர்ப்பு என்பது போய், சுய படைப்புகள் தாமே பெருகும் என்பது உறுதி.

**(8-ஆம் உலகத் தமிழ் மாநாட்டின் 5-ஆம் நாளன்று காவலர் திடலில் கூடிய 'அறிவியல் அரங்கத்'தில் ஆற்றிய உரையிலிருந்து)**

# இலக்கியப் பெருமை!

**மாண்புமிகு மத்திய நலத்துறை இணை அமைச்சர் திரு கே.வீ. தங்கபாலு**

**த**மிழின் இலக்கியப் பெருமை நிலைத்து நிற்பது. மறுக்க முடியா வளம் கொண்டது. உலகின் எந்த மொழியுடன் ஒப்பிட்டுப் பார்ப்பினும் நம் மொழியின் இலக்கியச் சுவை அம் மொழிகளின் சுவைகட்கு எவ்விதத்திலும் குறைந்ததன்று. "செம்புலப் பெயல்நீர் போல் அன்புடை நெஞ்சங்கள்" கலந்ததைச் சொல் லும் சங்க இலக்கியமாகட்டும்.

"மையோ மரகதமோ மாரிகடலோ மழைமுகிலோ
ஐயோஇவன் வடிவென்பதோர் அழியா
அழகுடையான்"

என்று ஸ்ரீராமனைக் கம்பன் வர்ணிக்கும் இடைக் காலமாகட்டும்,

"பொங்கி வரும் பெருநிலவு போன்ற
ஒளிமுகமும் புன்னகையின் புது நிலவும்
போற்ற வரும் தோற்றமுமாய்"
துங்கமணி மின்போலும் வடிவத்தில் அழகு
தெய்வத்தைப்

பாரதி காணும் பாங்காகட்டும்,

"அருவிகள் வைரத்தொங்கல்
அடர் கொடி பச்சைப் பட்டே,
குருவிகள் தங்கக் கட்டி
குளிர்மலர் மணியின் குப்பை,"

என்ற பாரதிதாசனின் அழகின் சிரிப்பா கட்டும்,

"அவள் மறந்து சென்ற கொடுமையினால்
என் இதயத்தை அரிக்கும் கரையான்களே
என் இதயத்தின் சிறு பகுதியையாவது
விட்டுவையுங்கள்அவளின் நினைவுகளுக்காய்,"

என்று இரங்கற்பா பாடும் புதுக் கவிஞ னின் துயராகட்டும், தமிழின் இலக்கியச் சுவை எம்மொழியின் இலக்கியச் சுவைக்கும் குறைந் ததன்று.

நண்பர்களே கலைகள் ஓங்கிய காலத்தில் கவின் பெற விளங்கிய தமிழ், அறிவியல் கோலோச்சும் இந்நாளிலும் முதல் நிலை பெறல் வேண்டும். அந்நிலை அடைதற்கு உலகத் தமிழர்களின் நோக்கும் போக்கும் காலத்திற்கேற்ப மாறுதல்கள் பெறல் வேண்டும். தமிழர் உயர்ந்தாலன்றித் தமிழ் மொழியின் சிறப்பு உலகு அறிதல் இயலாது. எனவே, அறிவியல், பொருளியல் துறைகளில் முதல்நிலை பெறுதலுக்காய்த் தமிழ் மொழி யைப் பண்படுத்தல் மிக இன்றியமையாத் தேவை. நம் மொழியின் வளர்ச்சிக்கும், அது நிலைத்து நிற்பதற்கும் முதல் தேவை, நாம்-தமிழ் மக்கள் பல்வேறு துறைகளிலும் முன் னேறுதல் ஆகும்.

'வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்- இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து- இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும்,"

என்று பாரதி கூறியதற்கொப்ப நம் மக் களின் அடிப்படைத் தேவைகளை உணவு, உடை, உறைவிடம், கல்வி, உடல், மன நலம் ஆகியவற்றை ஒருபுறம் உறுதி செயல் வேண்டும்; மறுபுறம் நம் திறமை மிக்க இளைஞர் கூட்டம் பல்வேறு துறைகளிலும் கல்வி, மருத்துவம், பொறியியல், பொருளியல், வணிகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் முன்னேறிடத் தொடர்ந்து தொலை நோக்குத் திட்டங்கள் தீட்டப்படல் வேண்டும், தீட்டிய திட்டங்கள் செவ்வனே செயலாற்றப் படல் வேண்டும்.

உலகக் குடிமக்களாய் தமிழ் மக்கள் உருவாவதற்கென நம் சமுதாயத்தின் மன நிலையையே பண்படுத்தும் கருவியாய்த் தமிழ் மொழி அமைதல் வேண்டும். மொழியின் எழுத்துச் சீர்திருத்தங்களும் பிற மொழிச் சொற்கள் நம் மொழியில் எவ்வாறு ஏற்கப்பட வேண்டும் என்பது பற்றிய முடிவுகளும் இந்த அடிப்படையிலேயே நோக்கப்படல் வேண் டும்.

**தஞ்சாவூரில் 1.1.1995 அன்று நடந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க விழாவில் மாண்புமிகு மத்திய நலத்துறை இணை அமைச்சர் திரு கே.வீ. தங்கபாலு அவர்கள் நிகழ்த்திய வாழ்த்துரை யிலிருந்து.**

# சீனாவில் சிவன் கோயில்!

—நொபொரு கரஷிமா

**700** ஆண்டுகளுக்கு முன் கடல் கடந்து சீனா சென்ற தமிழர்கள், அங்கு சிவன் கோயில் கட்டிய தகவலை உலகத் தமிழ் மாநாட்டில் ஜப்பானியத் தமிழ் அறிஞரும், உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத் தலைவருமான நொபொரு கரஷிமா வெளியிட்டார்.

நொபொரு கரஷிமா இதுபற்றிக் கூறியதாவது:

தமிழகம் மற்றும் வெளிநாடுகளில் உள்ள கல்வெட்டுகள், இலக்கியங்களை ஆராய்ந்தபோது, தமிழர்கள் வர்த்தகம் புரியப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வெளிநாடுகளுக்குக் கப்பலில் சென்ற விவரங்கள் தெரிய வருவதுடன், அவர்களின் வர்த்தக் முறைகளும் புரிய வருகிறது.

தமிழ் வர்த்தகர்கள் மணிகிராமம், ஐனூருவர் மற்றும் நானநேசி என்ற 3 வகை வர்த்தகப் பிரிவுகளாகச் செயல்பட்டுள்ளனர்.

9-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரையிலும் மணிகிராமக் குழுக்கள் தமிழ்நாடு, கேரளப் பகுதிகளில் செயல்பட்டுள்ளன. இந்த வர்த்தகக் குழுக்கள் ஒன்றாக இணைந்து, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் செயல்புரிந்துள்ளார்கள். இதற்கான சான்றுகள் இக்குழு கட்டி உள்ள ஒரு தெப்பகுளத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்தத் தெப்பக்குளம் தாக்குவா பா என்ற மலாய் நாட்டில் உள்ள ஊரில் உள்ளது.


இங்குள்ள கல்வெட்டில் மணி கிராமத்தாருக்கென 'வீரக் கொடியார்' என்ற சிறப்பு ஆயுதப் படை செயல்பட்டு வந்த விவரமும் தெரிய வருகிறது. கடல்கொள்ளை முதல், அனைத்துக் கொள்ளையர்களிடம் இருந்து பாதுகாப்பதே இப்படையினரின் வேலை என்பதும் தெரியவந்துள்ளது.

ஐனூருவர் என்ற வர்த்தகப் பிரிவு செயல்படும் முறை பற்றி நீலகண்ட சாஸ்திரி பல ஆராய்ச்சிகளைச் செய்து கண்டறிந்து உள்ளார். தென் இந்தியாவில்- குறிப்பாகத் தற்போதைய சென்னை மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து 500 வியாபாரிகள் கொண்ட குழு செயல்பட்டு வந்த முறைகளை அவர் ஆராய்ந்து இருக்கிறார்.

இந்த அமைப்பு கர்நாடக மாநிலத்தில் உள்ள அய்ஹோல் என்ற ஊரில் துவங்கியது என்று தெரிகிறது. இவர்களும் தங்களின் தற்காப்புக்கு எனத்தனி ஆயுதப் படை வைத்து இருந்தார்களாம். 500 பேர் கொண்ட இந்தக் குழுவின் முக்கியப் பணி, வியாபாரம் மட்டுமே என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 10 ஆம் நூற்றாண்டில் இந்த 500 பேர் கொண்ட குழு பல திசை நோக்கிச் சென்று வர்த்தகம் புரிந்து பிறகு, மாதங்கிரி வல்லவதேசி உய்யகொண்டாபட்டினம் என்ற ஊரில் உள்ள வேலபுரத்தில் சந்தித்து இருக்கிறார்கள்.

பிறகு தங்கள் சந்ததியினரை நகர சேனாபதி, நாட்டுச்



செட்டியார் என்றும் பட்டினன் பூமி தேசி அப்பர் என்றும் அறிவித்துள்ளனர். மேலும் வேலபுரத்தில் வர்த்தகம் புரிய வருபவர்கள் அங்கு கடை போட 'அஞ்சு தண்டம்' தங்கக் காசுகள் தந்துவிட வேண்டும் என்று அறிவித்துள்ளார்கள்.

இவ்வாறு வேலபுரம் என்ற ஊரில் தாங்கள் ஈட்டிய செல்வம் சென்றடைவதுடன் இங்கு வரும் வெளிநாட்டவர் வர்த்தகம் புரிய வரிபோன்று ஒரு தொகையையும் பெற்று, அந்த ஊரைச் செழிக்கச் செய்துள்ளார்கள்.

இவ்வளவு கூட்டு அமைப்பாகச் சேர்ந்துகொண்டு செயல்பட்டதால் பண்டைக் கால வணிதர்கள் பெரும் அளவில் பொருள் ஈட்டுவதுடன் உலகமே பாராட்டும் வகையில் செயல்பட்டுள்ளனர்.

இந்த வர்த்தகக் கூட்டமைப்பில் அரசியல் சார்புகள் இன்றி உலக வர்த்தகத்தில் தங்களை இணைத்துக்கொள்ளும் நோக்குடன் செயல்பட்டுள்ளனர். அரசரின் உதவியில்லாமல் தனியார் துறையாகச் செயல்பட ஒரு குழுவாகத் தங்களை இணைத்துக் கொண்டு தங்களை வியாபாரிகள் என்று பறைசாற்றிக் கொண்டு உலக வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த முறை வரவேற்கத்தக்க அம்சம் என்று நொபொரு கரஷிமா குறிப்பிட்டார்.

சீனாவில் உள்ள துறைமுகம் ஒன்றில் 1281-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதில் சிவன் கோயில் மகிமை பற்றிய விளக்கம் உள்ளது.

அந்தக் கல்வெட்டில் சீனாவின் தென் பகுதியில் வாழ்ந்த யூவான் கிங் உடல் நலத்திற்குச் சிவன் கோயில் கட்டப்பட்டதாகவும் அதன்பிறகு யூவான் கிங் பூரண குணம் அடைந்த சம்பவம் பற்றியும் தெரிய வந்தது.

இவ்வாறு தமிழர்கள் கடல் கடந்து வியாபாரம் செய்து அதை அதிகரித்தும் உள்ளார்கள். செல்லும் இடங்களில் தமது கலாச்சாரம், மதம் - மொழியின் சிறப்புகளையும் பரப்பி உள்ளார்கள்.

# அரசு அலுவலர்களுக்குக் கணிப்பொறி இயக்கப் பயிற்சி

அரசு அலுவலகங்களிலும், அரசு நிறுவனங்களிலும் கணிப்பொறிகள் அமைக்கப்பட்டு, அன்றாட நிர்வாகச் செயல்பாடுகள் விரைவுபடுத்தப்பட்டு, அரசு நடைமுறைப்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களின் பயன்கள் மக்களை விரைந்து சென்றடைய வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெஜெயலலிதா அவர்கள், மேல்நிலை அரசு அலுவலர்கள் அனைவர்க்கும் கணிப்பொறி இயக்கப் பயிற்சி துவக்க ஏதுவாக ரூ.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

ஒதுக்கப்பட்ட இந்த நிதியினைக் கொண்டு நடப்பு ஆண்டில் அரசு அலுவலகங்கள், அரசு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் மேல்நிலை அலுவலர்கள் அனைவர்க்கும் 'அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனம்' மூலம் 'கணிப்பொறி இயக்கப் பயிற்சி' விரைவில் அளிக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

# தமிழும் அறிவியலும்

திரு கா.ப. பட்டாபிராமன்

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

**(எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு நாளன்று 'தமிழும் அறிவியலும்' என்ற கருத்தரங்கில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கா.ப. பட்டாபிராமன் அவர்கள் நிகழ்த்திய உரையிலிருந்து)**

ஆயிரம் அடைமொழிகள் சொல்லி ஆண்டவனை அர்ச்சிப்பது போல, ஆண்டாண்டுக் காலமாகத் தமிழ் மொழி என்றால் தாய்த்தமிழ், இன்பத் தமிழ், வண்டமிழ், தீந்தமிழ் என்றெல்லாம் தமிழை அடைமொழியில்லாமல் வெறும் தமிழாகச் சொல்லுகின்ற வழக்கமே இருந்ததில்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மொழிகளில் கூட சில சீர்குலைந்துவிட்டன.

"ஆரியம் போல் உலக வழக்கு
அழிந்து, ஒழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே"

என்று மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால், நம்முடைய தமிழ் மொழி ஆயிரமாயிரம் ஆண்டுகளான பிறகும் கூட, ஏற்றமிகு எந்த மாற்றத்தையும் ஏற்றுக்கொண்டு தனது வளர்ச்சியில் எந்தவிதமான தடையும் ஏற்படாமல் வளர்ந்திருக்கிறது. தமிழ் மொழி எந்த மாற்றத்தையும் ஏற்றுக்கொள்ளும் திறமையோடு இருப்பதால் தான், இது பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் திகழ்கிறது.

"The most ancient, at the same time the most modern"

- என்ற பொருளில் தான் நமது அரசியல் மேதை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கி வைத்தபோது சொன்னார்கள்.


"இந்த நூற்றாண்டின் அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் தமிழுக்குக் கொண்டு வர வேண்டும்; இனி வரும் நூற்றாண்டுகளுக்கும் அருந்தமிழை ஆயத்தப்படுத்த வேண்டும். இந்த இரண்டு கடமைகளையும் நாம் விரைந்து நிறைவேற்றியாக வேண்டுமென்றும், இயல், இசை, நாடகம் என்று மூன்று கூறுகளாகத் தமிழைப் பிரித்துப் பார்த்த நாம், வளர்ந்து வரும் அறிவியல் உயர்வையும், அறிவையும் மொழியில் புகுத்துவதற்கு ஒரு நான்காம் தமிழை - அதாவது, அறிவியல் தமிழை வளர்க்க வேண்டும்" என்று கூறினார்கள்.

தமிழர்கள் அறிவியல் சிந்தனையிலும், கண்டுபிடிப்பு ஆற்றலிலும் வல்லவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். புதியன கண்டுபிடிக்க வேண்டுமென்றும், தேவையில்லாத பழையன களையப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும் தான் அன்றைக்கே தமிழர்கள், "பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற தத்துவத்தையே உலகிற்குத் தந்தார்கள்.

நம் முன்னோர்கள் அறிவியல் சிந்தனையில் ஆற்றல் மிக்கவர்களாக விளங்கியிருக்கிறார்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின்னாலே கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் எத்தனை எத்தனையோ அறிவியல் செய்திகள் மற்றும் கண்டுபிடிப்புகள் பண்டைய தமிழ் இலக்கியங்களில் பரவிக் கிடக்கின்றன.

**ஐம்பெரும் பூதங்கள்**

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவைகளின் கூட்டுச் சேர்க்கைதான் உலகம் என்கின்ற இந்த உண்மையை, இன்றைக்கு விஞ்ஞானிகள் சொல்வதற்கு முன்பாகவே நம்முடைய பண்டைத் தமிழர்கள், விஞ்ஞானக் கருத்துக்கள் இல்லாத காலத்திலேயே, ஆராய்ச்சி மையங்கள் இல்லாத நேரத்திலேயே எடுத்து விளக்கியிருக்கிறார்கள். நிலம், நீர், நெருப்பு, காற்று இவை மனித வர்க்கத்தின் அருகிலேயே இருக்கின்ற பொருட்கள். நிலத்தைத் தொட்டுப் பார்க்கலாம் நீரை எடுத்துப் பருகிப் பார்க்கலாம். நெருப்பை உணர்ந்து நிலையை அறியலாம். காற்றைச் சுவாசிக்கிறோம். ஆனால், வானம் நம் கைக்கும், கண்ணுக்கும் எட்டாத தொலைவிலேயே இருக்கின்ற இந்தப் பொருளைப் பற்றித் தொலை நோக்குக் கருவிகள் இல்லாத காலத்திலேயே ஆகாயத்தில் கூடு



கின்ற விண் மேகங்கள், அங்கே இருக்கின்ற சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் இவைகளை ஆய்ந்து இவற்றின் தன்மைகளைப் பற்றி அளவெடுத்துச் சொல்லுகின்ற பாடல்கள் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

இதைத் தான் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் 'முத்துக்கண்ணன் சாத்தனார்' பாடுவார் -

"செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த
மண்டிலமும்
வளிதிரி தரு திசையும்
வறிதுநிலைஇய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல"

உலகம் உருண்டை என்பது அறிவியல் ரீதியாக ஏதோ இன்றைக்குக் கண்டுபிடிக்கப்பட்ட, கண்டுபிடிப்பாகப் பேசப்படுகிறது. இதைக் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் மாணிக்கவாசகரின் "திருஅண்டப் பகுதி" பாடலில் வானமண்டலத்தில் அறிவியல் தமிழின் தன்மை பற்றிப் பேசப்படுகிறது. இந்தப் பாடலைப் பார்க்கின்றபோது அண்டக் கோளங்கள் அடங்கிய உலகம் உருண்டை என்பது தெளிவாகிறது.

"அண்டப் பகுதியின் உண்டைப்
பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பரும்
காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில்
பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட
விரிந்தன".

**வானவில்**

வானவில்லின் தத்துவம் மேலை நாட்டவருக்கு அண்மைக் காலம் வரை தெரியாமல் இருந்தது. வானவில்லின் தத்துவமே, சூரியனின் ஒளிக்கதிர்கள் மழை மேகத்தின் உள் நுழைந்தால் வானவில் தோன்றுமென்பது இன்றைய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு. எப்பொழுதுமே சூரியன் இருக்கின்ற திசைக்கு எதிர்த் திசையில் தான் தோன்றுமென்பதும், அந்த வானவில்லில் பல வண்ணங்கள் இருப்பதையும் நம் தமிழர்கள் அன்றைக்கே கண்டுபிடித்தார்கள்.

இவ்வுண்மையை அவ்வையாரின் தனிப்பாடலில் நாம் காண முடிகிறது.

# தமிழ் மொழிக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பீர்!

## இலங்கை அதிபர் சந்திரிகா குமாரணதுங்க வாழ்த்து!

**த**மிழ் மொழியின் பெயரால் மக்களை ஒன்றுபடுத்த வேண்டும் என்று இலங்கைக் கால்நடை வளர்ச்சி மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு தொண்டமான் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசியதாவது:

"தஞ்சைத் தரணியில் இந்தத் தமிழ் மாநாடு நடைபெறுவதற்கு எனது வாழ்த்துக்களையும் இலங்கைத் தமிழ் மக்கள் மற்றும் அரசு சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் 3-வது தடவையாக இந்த உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிறது. உலகத் தமிழர்கள் அனைவரையும் மொழியால் ஒன்றுபடுத்த இந்த மாநாடு பயன்பட வேண்டும். இந்த மாநாடு தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை ஆய்வு செய்து வழங்க வேண்டும்". என்ற அவர், இலங்கை அதிபர் சந்திரிகா குமாரணதுங்க இந்த மாநாட்டிற்கு வாழ்த்துச் செய்தி கொடுத்தனுப்பி இருக்கிறார் என்று கூறி, அந்த வாழ்த்துச் செய்தியையும் படித்தார்:

"தமிழ் மொழி மற்றும் தமிழ் கலாச்சார வளர்ச்சியில் இலங்கை அரசு ஆழமான ஈடுபாடு கொண்டுள்ளது. இலங்கையில் உள்ள தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் கலாச்சாரத் தனித்தன்மை, மொழித் தனித்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இலங்கையில் தமிழ் மொழி ஒரு ஆட்சி மொழியாக இருக்கிறது. நிர்வாக மொழியாகவும் நீதிமன்றங்களில் ஒரு மொழியாகவும் இருக்கிறது.

"தமிழ் மொழிக்கு அரசியல் சாசன ரீதியாகத்தகுதி வழங்கி மேலும் வலிவு சேர்க்க இலங்கை அரசு ஏற்கெனவே ஒரு ஆட்சி மொழிக் குழு அமைத்துள்ளது. இந்தக் குழு இதன் நோக்கம் குறித்து ஆராயும். இலங்கையில் இருந்து தஞ்சை உலகத் தமிழ் மாநாட்டிற்குப் போயிருக்கும் தமிழ் அறிஞர்கள், தமிழ் மொழிக்கு மென்மேலும் சிறப்புச் சேர்ப்பார்கள் என்று நம்புகிறேன்".

—இவ்வாறு இலங்கை அதிபர் அந்த வாழ்த்துச் செய்தியில் கூறி இருந்தார்.

"விடுசுடரான் கதிர்,
வீழ்புயன்மேல் விழுந்தால்
தனுவாம் (வில்) அதன்
தத்துவமே"

**நீரின் அடர்த்தி**

நீரின் அடர்த்தியைப் பற்றி அண்மைக்கால விஞ்ஞானிகள் கண்டுபிடித்த கண்டுபிடிப்பை அன்றைக்கே நம் தமிழர்கள் கண்டுபிடிக்கவில்லையா? தமிழ் இலக்கியங்களைப் பார்க்கின்ற போது ஆழமான பகுதியில் இருக்கின்ற நீர் நீல நிறமாக இருக்கும் என்றும், ஆழம் குறைவான பகுதியில் இருக்கின்ற நீர் பச்சை நிறமாக இருக்கும் என்றும், கடல் அலை நீர் வெண்மை நிறமாக இருக்குமென்பதும் பண்டைத் தமிழர்களுடைய ஆய்வு. அதனால் தான், நீருக்கு நிறமில்லை என்பார்கள். ஆழமான இடத்தில் இருக்கின்ற நீர் நீலநிறமாக இருக்கின்ற காரணத்தினால், நீர் நீல நிறம் என்று சொல்லிவிட முடியாது. அதேபோல் ஆழம் குறைவான இடத்தில் இருக்கின்ற நீரைப் பார்த்து பச்சை என்றும் சொல்லிவிட முடியாது. அதே போல் கடல் அலை நீர் வெண்மை என்றும் சொல்லிவிட முடியாது. நீர் எதனோடு சேர்கின்றதோ அதன் தன்மையைப் பெறும் என்கின்ற இந்நிலையைச் சங்க இலக்கியக் குறுந்தொகை வரிகளான "செம்புலப் பெயல்நீர் போல" என்ற வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

**இரும்புணி நீர்**

இரும்பை அழிக்கக் கூடிய சக்தி எதற்குமே இல்லை என்று சொல்லுகின்ற இந்தக் காலத்தில், அன்றைய தமிழர்கள், நீர் இரும்பை அழிக்கக் கூடும் என்பதை 'இரும்புணி நீர்' என்ற புறநானூற்று வரிகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

**டார்வின் தியரி**

'டார்வின் தியரி' என்று பேசுகிறோம். இதை மாணிக்க வாசகர் மிகத் தெளிவாக அன்றைக்கே கூறிவிட்டார்.

> **இயற்கைத் தேவி கோயில் கொண்ட நூல்கள்!**
>
> தமிழ்நாட்டின் மொழியாகிய தமிழ் மிகத் தொன்மையானது. தமிழிலுள்ள திருக்குறள், கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, திருக்கோவை, பெரிய புராணம், கம்பராமாயணம் போன்ற இலக்கியங்கள் வேறு பல மொழிகளில் இல்லையென்றே கூறலாம். மற்ற மொழிகள் நூல்கள் தொகையில் பெருகியிருக்கலாம். இயற்கைத் தேவி கோயில் கொண்ட நூல்கள் நம் பழந்தமிழ் நூல்கள். இயற்கை வழியே மனித வாழ்வைக் காண வேண்டுமானால், தமிழ்நாட்டில் தமிழனாகப் பிறந்து தமிழ் மொழி பயிலல் வேண்டும்.
>
> –தமிழ்த்தென்றல் திரு.வி.க.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்
மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப்
பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்' பேயாய்க்
கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த்
தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர
சங்கமத்துள்'

இந்த நிலையைத் தமிழர்கள் அறியவில்லையா?

மரம், செடி, கொடிகளுக்கும் உயிருண்டு என்று கண்டு பிடிக்கப்பட்டது தமிழனால்தான். அதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஒல்காப்புகழ் தொல்காப்பியர்,

"புல்லும் மரனும் ஓரறிவினவே"
- என்று கூறியுள்ளார்.

**பித்தகோரஸ் தேற்றம்**

"ஓடிய நீளம் தன்னை ஒரெட்டுக்
கூறாக்கி
கூறதில் ஒன்றைத் தள்ளி
குன்றத்தில் பாதி சேர்த்தால்
நீடிய கர்ணம் தானே"

என்ற பாடல் வரிகள் பித்தகோரஸ் தேற்றத்தை நமக்கு நினைவூட்டவில்லையா?

**ஏன் - எரு**

வேளாண் துறை இன்று விஞ்ஞானத்தின் மூலம் வேகமாக முன்னேறி வருகிறது. ஏர் உழுதால் மட்டும் போதாது, எருவிட வேண்டும் என்பதை வள்ளுவரே கூறியிருக்கிறாரே!

"ஏரினும் நன்றாம் எருவிடுதல்
தொடிப்
புழுதி கஃசா உணக்கி"

**தஞ்சைப் பெரியகோயில்**

தஞ்சைப் பெரிய கோயிலின் உயரம் 216 அடி. அதனுடைய விமானத்தில் 80 டன் எடையுள்ள ஒரு கல்லை இராசராசன் வைத்து, அந்த விமானத்தை முடித்து இருக்கிறார் என்று சொன்னால்,

# மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தேவர் ஆராய்ச்சி அமர்வு

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கடந்த 19.10.94 அன்று சென்னை நகரில் நந்தனம் அருகே-மறைந்த தலைவர் பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய விழாப் பேருரையில், தலைவர் பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் அவர்களைப் பற்றிய ஆராய்ச்சி தொடங்குவதற்கு ஏதுவாக, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தேவர் ஆராய்ச்சி அமர்வு' (Chair) ஒன்று நிறுவப் படும் என்று அறிவித்திருந்தார்.

இதனையொட்டி, தற்போது 15 இலட்சம் ரூபாய் செலவில் மதுரை காமராசர் பல் கலைக்கழகத்தில் தேவர் அவர்களின் ஆராய்ச் சிக்கான இருக்கை ஒன்றினைத் தொடங்க உரிய நிதி ஒதுக்கீட்டினைச் செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

அன்றைக்கு எந்த விஞ்ஞானக் கருவிகள் இருந்தன? நான் கூட அறிகிறேன், இந்த 216 அடி உயரமுள்ள கோபுரத்திற்கு 41/2 அடி தான் அடித்தளம் என்கிறார்கள். இந்தக் கோயில் இன்றைக்கு உலகப் பிரதித்தி பெற்ற உலக மரபுச் சின்னமாகும்.

**சேமசெப்பு - தெர்மாபிளாஸ்க்**

நற்றிணை, குறுந்தொகைப் பாடல்களில் வருகின்ற சேமசெப்பு என்ற சொல், சூடு குறையாமல் வருகின்ற தெர்மா பிளாஸ்க்கை நமக்கு நினைவுபடுத்துகின்றது.

**கம்பனின் கோன்**

அன்று அணு என்பது உடைக்க முடியாத ஒன்று என்று அறிஞர்கள் சொன்னார்கள். பிறகு அணுவை உடைக்க முடியும் என்று சொன் னார்கள். இதை எண்ணிப் பார்க் கும்போது அணுவைப் பிளக்க முடியும் என்ற கருத்தும், இப்படிப் பிளக்கப்படுவதற்குக் 'கோன்' என்ற ஒரு சொல்லையும் குறிப்பிட்ட கம்பர் கருத்தையும் நான் நினைத் துப் பார்க்கின்றேன்.

**வானியல் சாத்திரம்**

திரு எல்டிசாமிக்கண்ணு பிள்ளை தொகுத்துள்ள 'இண்டியன் எபிம ரிக்ஸ்' என்ற நூலில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு நாள், நட்சத்திரம், திதி, கிரணங்கள் ஆகியவற்றை விரிவாகச் சுட்டிக்காட்டியுள் ளார்கள். இந்நூல் தொகுதிகளைத் தான் உலக அறிவியல் அறிஞர்கள் காலக்கணிப்புகளுக்காகப் பயன் படுத்துகிறார்கள்.

**உடற்கூறியல்**

ஒல்காப் புகழ் பெற்ற தொல் காப்பியர் தன்னுடைய நுண்மாண் நுழைபுலத்தால் நுண்ணிதின் ஆய்ந்து, மனிதனுடைய உணர்வுகள் ஒவ் வொரு சூழ்நிலையிலும் மாறுபடு வதை மெய்ப்பாடு என்று கண்டார். உலக இலக்கியங்கள் எல்லாவற்றி லும், நுணுக்கமான அகக் கூறுகளை உள்ளடக்கிய சொல்லே மெய்ப் பாடாகும். உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை 8 வகையாகப் பாகு படுத்திக் காட்டினார். நகையே, அழுகை, இழிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பனவே அவை. இதைத் தான் இன்றைய மருத்துவ அறி ஞர்கள் உடற்கூறியல் என்றும், உளவியல் என்றும் பேசுகிறார்கள்.

**சுற்றுலா**

அன்றைக்கு Tourism என் றார்கள். இந்திய மொழிகள் எந்த மொழியாலும் மொழி பெயர்க்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த போது சுற்றுலா என்ற சொல் உடனே பிறந்தது.

**கூட்டுறவு**

நான் சார்ந்திருக்கும் துறையான Co-operation என்று சொன்னால் 'கூடிச் செய்வது' என்பது பொருள். ஆனால், 'கூட்டுறவு' என்ற சொல் எவ்வளவு வலிவுடையதாகவும், பொலிவுடையதாகவும், கருத்தாழம் மிக்கதாகவும் விளங்குகிறது என் பதை எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன்.

**நிரலிகள்**

கணிப்பொறியிலுள்ள S0ftware களைத் தமிழில் 'நிரலிகள்' என்று பொதுவாகச் சொல் படைத்திருக் கின்றார்கள் என்பதை நாம் அறிய முடிகின்றது. இங்கு தலைமையேற் றிருக்கும் துணைவேந்தர் திரு வா.செ. குழந்தைசாமி அவர்கள், ஊசி செய்வது பற்றித் தமிழில் ஒரு கோடி நூல்கள் வர வேண்டு மென்று புதுக்கவிதையே எழுதி யிருக்கிறார்கள்!

# இராணுவப் பிரிவினருக்கு மருத்துவ ஊர்திகள்

## —மாண்புமிகு முதல்வர் ஆணை



**செ**ன்னை— புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள தமிழ்நாடு, கேரளா மாநிலங்களுக்கான இராணுவத் தலைமை அலுவலகத்தில், ஜி.ஓ.சி. (General Officer Commanding) தங்களுடைய இராணுவப் பிரிவினருக்குப் பயனளிக்கும் வகையில் இருதய சிகிச்சைக்கான இரண்டு மருத்துவ ஊர்திகள் வழங்கப்பெற வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை ஒன்றினை ஏற்கெனவே விடுத்திருந்தார்.

தமிழ்நாடு, கேரளா மாநிலங்களில் தலைமை இராணுவ அதிகாரி விடுத்திருந்த கோரிக்கையைப் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தான் ஏற்கெனவே இதுபோன்ற மருத்துவ ஊர்திகள் கடலோரப் பாதுகாப்புப் படையினருக்கு (Coast Guard) வழங்கியதைப் போன்றே, தற்போது இவர்களுக்கும், அவர்கள் கோரியுள்ள இருதயச் சிகிச்சைக்கான இரண்டு மருத்துவ ஊர்திகள் வழங்க ஏதுவாக ரூபாய் 13,00,000 நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

இந்த நிதியினைக் கொண்டு, தமிழ்நாடு, கேரளா மாநிலங்களுக்கான இராணுவத் தலைமை அதிகாரி கோரியுள்ளபடி, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள இராணுவப் பிரிவினருக்கான இரண்டு மருத்துவ ஊர்திகளை உடன் வாங்கி அளிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

# திருச்சியில் மண்மேம்பாடு ஆய்வு நிலையம்

**த**மிழ்நாட்டில் தோராயமாக மூன்று இலட்சம் எக்டேர் அளவுடைய நிலப்பரப்பு கொண்ட பகுதிகள் உப்பு நீரால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாட்டில் பயிரிடப்படும் மொத்தப் பாசன நிலத்தில் ஏறக்குறைய 22 சதவிகிதம் இவ்வாறு உப்பு நீரால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் தமிழக வேளாண்மைத் துறை நடத்திய ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது. இது போன்று உப்பு நீரால் பாதிக்கப்பட்டுள்ள நிலங்களில் சாகுபடியாகும் பயிர்கள் மிகக் குறைந்த விளைச்சலையே தரும் என்ற செய்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டது. இது தொடர்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆலோசனையின் பேரில், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தோடு தொடர்பு கொள்ளப்பட்டு, உப்பு நீர் பாதிப்பினால் ஏற்படுகின்ற விளைவுகளிலிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாத்து விளைச்சலை அதிகரிக்கத் தக்க வழி வகை செய்ய தமிழக வேளாண்மைத் துறை பணிக்கப் பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அளித்த ஆலோசனையின் அடிப்படையில் கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் ஆதரவோடு, திருச்சிராப்பள்ளியில் 23 இலட்சம் ரூபாயில் மண் மேம்பாடு ஆய்வு நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

# நிழல் விழாக் கோபுரம்!





மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

திருமதி புலவர் இந்திரகுமாரி


கல்லணை கட்டினான் கரிகால் வளவன்
கன்னித் தமிழ் காக்கச்
சொல்லணை கட்டி வைத்த
சோழகுல அன்னையே!
தஞ்சை ஒரு நெற்களஞ்சியம்
தமிழ்பாடும் கவிஞர்களோ சொற்களஞ்சியம்
இங்கே- தமிழ்பாடும் கவிஞர்களோ சொற்களஞ்சியம்!
புன்னகைதான் மின்னி மின்னிப்
பொன் நகையாய்ப் பூப்பதனால்- தாயே
நீர் பொற்களஞ்சியம்!

தமிழ்நாட்டின் தனிச் சிறப்பாம்
தஞ்சைப் பெருங்கோயில்!
நிழல் விழாக் கோபுரத்தைக்
கட்டிவைத்தான் ராஜராஜன்.



என் கோயில் நீங்கள்தான்!
நீங்களும்
நிழல்விழாக் கோபுரம்தான்!
நேசித்து உங்களை
நிழல்களாய்ப் பின்தொடரும்
நெஞ்சங்கள் வீழ்வதில்லை.
அதனால்- நீங்களும்
நிழல் விழாக் கோபுரம்தான்!



இங்கே
கவியரங்கம் எதற்கு?- நம் தமிழர்
கனவுகளில் விதை விதைக்க...
காவிரிக் கரைதனிலே- பல்
கலைத் தமிழ்ப் பயிர் வளர்க்க!

தமிழ்ப் புலவர்கள் கண்ட சால்புகள் யாவும்
வேந்தர்களுக்கு அணிவித்த
வெற்றிப் பட்டயங்களாய்-
வீற்றிருக்கின்றன இலக்கியத்தில் !
முல்லைக்குத் தேர் கொடுத்தான் வேள் பாரி !
பெற்றவரே கைவிட்ட
பிள்ளைக்குத் தொட்டில் கட்டினார்
எங்கள் தாய் மாரி !

இது
வழிவழியாய் வந்த வள்ளல் மனமன்றோ !
குலவழியாய் வந்த கொடையின் குணமன்றோ-
அன்னை சந்தியா

குலவழியாய் வந்த கொடையின் குணமன்றோ ?
புறநானூற்றில் புகழ்பெற்றது முரசுக் கட்டில் ... எங்கள்
தாய் வரலாற்றில் புகழ் பெற்றது- அரசுத் தொட்டில் !
வீரமாய்- கொடையாய்
சரித்திர நாயகியாய்- சான்றாண்மையாய்
இதோ எங்கள் தாய்
எதிரே இருக்கின்றார் !- இதனைத்
தனித் தனித் தலைப்பேந்தி
தமிழ்க் கவிஞர் பாடட்டும் !
தமிழ்ப் புலவர்கள் கண்ட அத்தனைச் சால்புகளும்
என் அன்னையிடம் அடக்கம்...



கார்- ஆட்சி செய்தால் மழை பொழியும் !
மழை பொழிந்தால் ?
நீர் ஆட்சி செய்யும் !
நீர் ஆட்சி செய்தால்- நெல் விளையும் !
நெல் விளைந்தால் ?
ஏர் ஆட்சி செழிக்கும் !
ஏர் ஆட்சி செய்தாலோ-
பார் ஆட்சி செய்யும் !

பைந்தமிழ் வளர்ச்சி பெறும் !

பார் ஆட்சி செய்யும் பைந்தமிழை வளர்ப்பதற்கு
யாராட்சி செய்ய வேண்டும் ?
இதற்கு ஆராய்ச்சியா வேண்டும் ?
நீர் ஆட்சி செய்ய வேண்டும்
தாயே ! நீண்ட நெடுங்காலம் !
அன்னையே வணக்கம் !

(எட்டாம் உலகத் தமிழ் மாநாடு- நான்காம் நாள் நடந்த
கவியரங்கில், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்
அவர்கள் ஆற்றிய தொடக்கவுரையிலிருந்து)

# நூல் நயம்

## வாழ்க்கைக் கலை

ஆசிரியர் அ.கி. பரந்தாமனார்

வெளியீடு அல்லி நிலையம்
19, முத்துமுத்தலி தெரு
சென்னை 7

பக்கம் 216 விலை ரூ.30

கலைகளிலெல்லாம் அரிய கலை வாழ்க்கைக் கலை என்பதை இந்நூலைப் படிக்கும்போது உணர்கிறோம். "சிக்கலாக உள்ள வாழ்க்கையை எவ்வாறு நடத்த வேண்டும் என்று தெரிந்து நடப்பதுதான் அறிவுடைமை. இதுதான் வாழ்க்கைக் கலை" என்று வாழ்க்கைக் கலைக்கு வடிவம் தருகின்றார். ஆசிரியர். இல்லறம் நல்லறமாக விளங்க, நம் முன்னோர்களின் அனுபவ உரைகள் நம் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவும் படிக்கற்களாகும். அவற்றையெல்லாம் தொகுத்தும் வகுத்தும் வழங்கியிருக்கின்றார் நூலாசிரியர்.

வாழ்வாங்கு வாழ்வதற்கு மட்டுமல்ல, வாழ்க்கையில் முன்னேறத் துடிப்பவர்களுக்கு, வாழ்க்கையை இனிதே நடத்திச் செல்ல விழைபவர்களுக்கு இந்நூல் நல்ல வழிகாட்டியாக இருக்கின்றது.

## தற்காலப் படைப்பிலக்கியத்தில் மத நல்லிணக்கமும் மனித நேயமும்

படைப்பாசிரியர்:
தி. தயானந்தன் பிரான்சிஸ்

வெளியீடு: கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை 3

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், ஆண்டுதோறும் இலக்கிய நண்பர் வட்டக் கருத்தரங்கினை நடத்தி வருகின்றது. அக் கருத்தரங்குகளில் வாசித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூலாக வெளியிடப் பெறுகின்றது. அந்த வகையில், 1994-ஆம் ஆண்டு நடந்த கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூலாக இது வெளிவந்திருக்கின்றது.

படைப்பிலக்கியங்கள் பெருகிக் கொண்டே வருவது வரவேற்கத்தக்கது தான். ஆனால், அவற்றில் மதநல்லிணக்கமும், மனித நேயமும் கோடிட்டுக் காட்டப்படுகின்றனவா? இவற்றை அலசி ஆராய்வதுதான் இத் தொகுப்பு நூல்.

கவிதை, சிறுகதை, புதினம், மற்றும் முஸ்லீம் இலக்கியம், கிறிஸ்தவ இலக்கியம், தலீத் இலக்கியம், குழந்தை இலக்கியம், திரைப்படப் பாடல்களில் மத நல்லிணக்கம், மனித நேயம்- இவை எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை படைப்பாளர்கள் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். வண்ண முகப்பும், வடிவமைப்பும் நம் எண்ணம் இனிக்கும் வகையிலே பதிப்பித்திருக்கின்றார் டாக்டர் தயா அவர்கள். இலக்கிய ஆர்வலர்களுக்கு ஓர் இனிய படைப்பு இது.

## வெ. சாமிநாத சர்மாவின் தமிழ்ப்பணி

ஆசிரியர்: டாக்டர் பெ. சிவசக்தி

வெளியீடு: அன்புப் பதிப்பகம்
18, ஸ்பர்டாங்க் ரோடு,
சேத்துப்பட்டு,
சென்னை 600 031

பக்கம்544 விலை ரூ.86

தமிழ்த்தென்றல் திரு.வி.க. காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெரியார் வெ. சாமிநாதசர்மா. பல்துறை வல்லுநரான இவரது படைப்புத் திறனை நுண்ணிதின் ஆய்வு செய்து தமிழுலகிற்கு வழங்கியுள்ளார் ஆசிரியர். ஒன்பது இயல்களில் அவரது வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டி, தமிழ் இலக்கிய வரலாற்றில் சாமிநாத சர்மாவின் பங்கு பணி குறித்து ஆய்வு செய்திருக்கிறார் நூல் ஆசிரியர்.

இதழியல் இலக்கியம், அரசியல் இலக்கியம், வரலாற்றிலக்கியம், படைப்பிலக்கியம், மொழிபெயர்ப்பு, நடை என்று வகுத்துத் தொகுத்து, சாமிநாத சர்மாவின் தமிழ்த் தொண்டினை விளக்குகின்ற பாங்கு பாராட்டுதற்குரியது. தமிழ் ஆர்வலர்களும், ஆய்வு மாணவர்களும் படித்துப் பயன் பெறக்கூடிய அரிய படைப்பு இது.

## திரை விலகியபோது..

ஆசிரியர்: மாலிக்

வெளியீடு: மல்லிகா பப்ளிகேஷன்ஸ்
1-75, ரயிலடி வீதி
இராஜகிரி
அஞ்சல் 614 207
தஞ்சை மாவட்டம்

பக்கம்:187 விலை ரூ.50

மாறுபட்ட பல கருத்துக்களை, அன்றாடம் நாம் சந்திக்கும் சம்பவங்களோடு இணைத்துச் சொல்லி, அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வும் கூறும் சிறுகதைகள்; சமய ஒற்றுமை அழகாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிறப்பாக அச்சிடப்பட்ட, அழகிய ஓவியங்களோடு கூடிய கண்களைக் கவரும் அழகிய நூல்.

## மின்னூர் சீனிவாசன் கவிதைகள்

ஆசிரியர்: மின்னூர் சீனிவாசன்

வெளியீடு: மின்னூர் வெளியீடு
227, தீர்த்தாரப்பன் தெரு,
சென்னை 600 005

பக்கம்:118 விலை ரூ.20

இது ஒரு கவிதைச் சரம். நாடு, மக்கள், சமூகம், இயற்கை என்று கவிதைக் கனிகள் நிறைய உள்ளன. இந்நூலில், 'உழவர் உலகம்' எனும் கவிதை கிராமத்துக் காட்சிகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. இதேபோல மின்னல், வான விளக்குகள், வானவில், அலைகள் முதலான இயற்கைக் காட்சிகளைக் கண்முன் கொண்டு வருகிறார் கவிஞர். இப்படி ஒவ்வொரு கவிதையும் சிந்தனையின் பிழம்பாக விளங்குகின்றது. படித்துச் சுவைக்கலாம்.

- பி.வி. கிரி.

# புத்தாண்டுச் சிந்தனைகள்

டத்தின் ஸ்ரீ திருமதி இந்திராணி சாமிவேலு (மலேசியா)

**1995**-ஆம் ஆண்டு ஓர் உன்னத மான ஆண்டு. காரணம், அது தமிழோடு மலர்ந்திருக்கிறது தமிழ் பேசும் நெஞ்சங்களில் எல்லாம் அது தேன் வார்த்திருக்கிறது.

உலகத் தமிழர்கள் அனைவரும் தஞ்சையிலே ஒன்றுகூடி இந்தப் புத்தாண்டில், தமிழ் அன்னைக்கு மணிமகுடம் சூட்டிக் கொண்டாடு வது நமக்குக் கிடைத்த பேரின்பம்.

நேற்று கோலாகலமாகத் தொடங்கிய எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, தமிழுக்கு மட்டும் பெருமை சேர்க்கும் மாநாடாகத் திகழவில்லை. அது, பெண் இனத் திற்கே பெருமை சேர்க்கும் மாநாடா கவும் திகழ்கிறது.

ஒரு பெண்ணின் பெயர் கொண்ட இடத்தில், ஒரு பெண் ணின் தலைமையில் வெற்றிகரமாக நடைபெறும் இந்த மாநாடு வர லாற்றில் ஒரு பொன்னேடு என் றால் மிகையல்ல!

கடந்த ஏழு மாநாடுகளும் ஆண்களின் தலைமையில் நடை பெற்றன. ஒரு பெண்மணியின் தலைமையில்— ஏற்பாட்டில் நடை பெறும் முதல் மாநாடு என்ற சிறப் பும் இந்த எட்டாவது மாநாட்டுக்குக் கிடைத்திருக்கிறது.

காவிரி நதி கரை புரண்டு அன்னை சத்யா விளையாட்டு அரங்கத்தின் வெள்ளமெனத் திரண்டு விட்டதோ— என்று வியப் பூட்டும் மாபெரும் மக்கள் கூட்டம்! காவிரிக் கரைதனில் நடக்கும் கன்னித் தமிழ் மாநாடு!

இவ்வளவு பெரிய மாநாட்டை நடத்தி பெண் இனத்திற்குத் தனிச் சிறப்பையும் தமிழுக்குத் தனி மதிப் பையும் சேர்த்திருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் சகோதரி புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆற்றலையும் விவேகத் தையும் பாராட்ட விரும்புகிறேன்.

பாரதி கண்ட புதுமைப் பெண் ணாகத் தமிழக முதல்வரைக் காண் கிறேன்.

பாரதிதாசன் கண்ட புரட்சிப் பெண்ணாகத் தமிழக முதல்வரைக் காண்கிறேன்.

பெரியார் கண்ட வீரப் பெண் ணாகத் தமிழக முதல்வரைக் காண் கிறேன்.

பெண்களாலும் பட்டங்களை ஆள முடியும், சட்டங்களைச் செய்ய முடியும் என்பதற்கு— புரட்சித் தலைவி அவர்கள் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறார்கள்.

பெண்களாலும் புரட்சிகள் செய்ய முடியும், புதுமைகளும் செய்ய முடியும் என்பதை இந்த அற்புதமான தமிழ் மாநாடு நிரூபித் திருக்கிறது. அவரது இந்த ஆற்ற லைக் கண்டு உலக மகளிர் சமு தாயமே பெருமை கொள்கிறது; மகிழ்ச்சி அடைகிறது.

**தஞ்சைத் தரணியில் நடந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டு இரண்டாம் நாள் (2.1.95) அன்று நடந்த வாழ்த்தரங்கில் கலந்து கொண்டு, டத்தின் ஸ்ரீ திருமதி இந்திராணி சாமிவேலு அவர்கள் (மலேசியா) ஆற்றிய உரையி லிருந்து.**

தமிழ்த் தாய்க்குச் சொல் ஆபரணம் பூட்டி மகிழ்வதற்காக இங்கு நாம் ஒன்று கூடியிருக் கிறோம்.

தமிழ் தொன்மையான மொழி, மென்மையான மொழி, இனிமை யான மொழி என்பதில் உலகில் யாருக்குமே சந்தேகம் இருக்க முடி யாது. தமிழில் உள்ள இதிகாசங்கள் யாவும் விலை மதிக்க முடியாத செல்வங்கள்! நம் வாய்மொழிகள் எத்தனைக் கற்றாலும் தாய் மொழிக்கு முதல்மை தர வேண்டும்.

வாழ்க்கைத் தொழிலுக்கு இன் றைய நவீன காலத்தில் தாய் மொழியை மட்டுமே நம்பியிருக்க முடியாது என்ற உண்மையை நாம் நிராகரித்துவிட இயலாது.

இன்றைய நிலையில், வாழ்க் கைத் தொழிலுக்கும் உலகோடு நாம் இணைவதற்கும் ஆங்கில மொழி இன்றியமையாத மொழியாக அமைந்திருப்பதை நாம் மறுக்க முடியாது!

உலக இணைப்புக்கு ஆங் கிலத்தை நாம் அங்கீகரிக்கலாம் அதில் தப்பில்லை. அதேவேளை யில், நமது பண்பாடு, கலை, கலாச் சாரங்கள், மரபுகள் காக்கப்பட வேண்டுமெனில், தமிழ் மொழி காக்கப்பட வேண்டும்.

தமிழ் அழிந்துபோனால் தமிழ் இனமே அழிந்துபோகும். எனவே, இன்றைய இளம் தலை முறை யினரிடையே தமிழ் உணர்வு மங்கி

மறையாமல் இருப்பதற்கு ஆக்க கரமான வழிகள் காணப்பட வேண்டும் என்று கருதுகிறேன்.

அந்தத் தமிழ் உணர்வை இளம் தலைமுறை மக்களிடையே பரப்புவதற்கு எளிமையான வழிகள் கையாளப்பட வேண்டும்.

நமது தமிழில் உள்ள இதிகாசங்களைப் படித்து அவற்றை நிலை நாட்டும் எண்ணத்தை இளையோரின் நெஞ்சங்களில் விதைக்க வேண்டும்.

தமிழில், பெண்களின் வீரத்தையும் பெருமையையும் பறைசாற்றும் அரிய பல நூல்களும் காப்பியங்களும் மெல்ல மெல்ல மறைந்து வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நாகரிகக் காற்றில் பெருமைக்குரிய பண்பாட்டு மரபுகள் தேய்ந்து வருகின்ற நிலையையும் காண்கிறோம்.

இந்த நிலையை மாற்றியமைத்து அத்தகைய நூல்களைப் பேணிக் காக்கும் நடவடிக்கைகளை மகளிர் அமைப்புகள் மேற்கொள்ள வேண்டுமாய் இந்த வேளையில் கேட்டுக்கொள்கிறேன்.

அசுர வேகத்தில் மாறிவரும் இவ்வுலகில் பெண்களுக்குச் சுய பாதுகாப்புத் தேவை. ஆகவே, தற்காப்புக் கலைகளில் பெண்கள் அதிக ஈடுபாடு காட்டிப் பயில வேண்டும்.

நேற்றைய தொடக்க விழாவில், முதல்வர் ஜெயலலிதா அவர்கள் தெரிவித்த ஒரு கருத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

இயல், இசை, நாடகத்தை அடுத்து, அறிவியல் தமிழ் என்னும் நான்காவது தமிழ் உருவாக வேண்டும் என்று முதல்வர் கூறினார்.

உலகம் அதிவேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில், நாம் பரிசீலிக்க வேண்டிய– செயல்படுத்த வேண்டிய ஒரு முக்கியமான சிந்தனை அது! கணினி யுகத்தில் இருக்கின்ற நாம், இன்னும் கட்டை வண்டி வேகத்தில் பயணம் செய்து கொண்டிருக்க முடியாது. கடலின் கரையோரத்து அலைகளைப் போல் உலக மேம்பாட்டிலிருந்து தமிழர்கள் ஒதுக்கப்பட்டுவிடக் கூடாது என்றால், நமது தமிழ் அறிவியல் பற்றியும் சிந்திக்கும் தமிழாக வேண்டும்.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று வர்ணிக்கப்படும் தஞ்சையில் சொற்களஞ்சியம் காணக் கூடியிருக்கும் உலகத் தமிழர்களுக்கு, இது ஒரு சிறந்த பயனுள்ள புத்தாண்டுச் சிந்தனையாகவும் அமைந்துள்ளது.

உலகில் வன்முறை இன்னும் அடங்கவில்லை; பெண்களுக்கு எதிரான கொடுமைகளும் ஒயவில்லை. குழந்தைகளுக்கு எதிரான சித்ரவதைகளும் மாயவில்லை! இத்தகைய கொடுமைகளும் சித்ரவதைகளும் துடைத்தொழிக்கப்பட்டு, ஒரு முன்னேற்றகரமான மகளிர் சமுதாயம் உருவாக வேண்டும் என்பதே எனது புத்தாண்டு ஆவலாகும்.

மலேசியாவில் எனது தலைமையில் இயங்கி வரும் ஸ்ரீசுருதி மகளிர் நல மன்றம் வீரமும் விவேகமும் மிக்க மகளிர் சமுதாயத்தை உருவாக்கும் இலட்சியத்தை அடிநாதமாகக் கொண்டிருப்பதையும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அத்தகைய மகளிர் சமுதாயம் மலர்வதற்கு ஆண்களைப்போல், பெண்களுக்கும் உயர்நிலைக் கல்வி அளிக்கப்பட வேண்டும்! இந்தச் சிந்தனை ஒவ்வொரு பெற்றோருக்கும் ஏற்பட வேண்டும்.

உலகத் தமிழின் சிறப்பு உயர வேண்டுமானால், தமிழர்கள் உயர வேண்டும். உலகத் தமிழ்ச் சமுதாயம் மாபெரும் கல்விமான்களை ஈன்றெடுக்கும் சமுதாயமாக மாறினால்தான் நமது தமிழும் வாழும், நிலைக்கும்!

எனவே, தமிழுக்கும் அதே வேளை, கல்விக்கும் முக்கியத்துவம் வழங்கும் ஆண்டாக இந்தப் புத்தாண்டைக் கருதிச் செயல்பட்டு முன்னேறுவது உலகத் தமிழர்களின் கடமை!

தமிழ் மாநாட்டை முன்னிட்டு, தஞ்சை மாநகரம் இன்று ஜெகஜோதியாய் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

அழகிய மணிமண்டபம், கலை நயமிக்க அலங்கார வளைவுகள், நெஞ்சையள்ளும் நினைவுத் தூண், சிந்தை கவரும் எம்.ஜி.ஆர். மற்றும் ராஜராஜ சோழன் சிலைகள், சிற்பங்கள். இவற்றை உருவாக்கிய தமிழர்களின் கரங்களில்தான் எத்தனைத் திறமைகள்!

என்ன இல்லை தமிழர்களிடம்? எல்லாத் திறமைகளும் இருக்கின்றன! ஆனால், மற்றவர்களைப்போல், தமிழர்களின் திறமைகள் உலக அளவில் பேசப்படவில்லை, பரப்பப்படவில்லை என்பதற்கு என்ன காரணம்? என்ன குறைபாடு என்பதனை ஆராய்ந்து பார்ப்பதற்குரிய காலகட்டம் வந்துவிட்டது! இந்தக் குறைபாடுகளை ஆராய்ந்து அவற்றைக் களைவதற்குரிய வழிகளைத் துரிதமாகச் செயல்படுத்த நாம் தவறிவிட்டால், நாம் **21-ஆம்** நூற்றாண்டில் பின்தள்ளப்பட்டு விடுவோம்.

தமிழர்களின் திறமைகள் பரவலாகப் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். உன்னத நிலையில் இருப்பவர்கள் பள்ளத்தில் இருப்பவர்களுக்குக் கைகொடுத்துத் தூக்கிவிட வேண்டும்.

தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும், முழக்கமிட்ட ஒற்றுமை தமிழ்ச் சமுதாயத்தில் வேர் பதிக்க வேண்டும். திறமை இருந்தும் ஒற்றுமை இல்லையேல் சமுதாயம் சிதறிவிடும். பிறகு உலகம் நம்மைப் பின்னுக்குத் தள்ளி சிரிக்கத் தொடங்கிவிடும்!

'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே' என்ற பாரதிதாசனின் கவிதையாக நமது தமிழ்ச் சமுதாயம் வாழ வேண்டும், உயர வேண்டும்.

# தாயகம் செல்ல விரும்பும் இலங்கைத் தமிழர்க்கான சலுகைகள்!

தமிழகத்தில் தற்போதுள்ள, 114 அகதிகள் முகாம்களில் உள்ள 64 ஆயிரத்து 573 இலங்கை அகதிகளில், 6 ஆயிரத்து 489 பேர் தங்கள் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக வருவாய் நிர்வாக ஆணையர் திரு மு. ரகுபதி அவர்கள் தெரிவித்துள்ளார். முகாம்களில் மட்டுமன்றி, வெளியில் தங்கியுள்ள அகதிகளும் அவர்கள் எந்த வழக்கிலும், குற்றங்களிலும் தொடர்பு இல்லாமல் இருப்பார்களேயானால் அவர்களும் தங்கள் தாயகம் செல்லலாம். இதற்காக இரண்டு கப்பல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**இலங்கை அகதிகள்**

இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களினால் 1983-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து, 680 அகதிகள் இந்தியாவிற்கு வந்தனர். அவர்களில் 25 ஆயிரத்து 585 அகதிகள் 1987-ஆம் ஆண்டு டிசம்பரில் அவர்களின் விருப்பத்தின் பேரில் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

மீண்டும் 1989-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு முதல் 1991-ஆம் ஆண்டு ஏப்ரல் வரை 35 ஆயிரத்து 894 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 78 பேர் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வந்தார்கள். அவர்களில் 1992-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 13 ஆயிரத்து 455 குடும்பங்களைச் சேர்ந்த, 44 ஆயிரத்து 175 பேர் கப்பல் மற்றும் விமானம் மூலம் தங்கள் நாட்டிற்குத் திரும்பி விட்டனர்.

**கப்பல்கள் தயார்**

தற்போது தாயகம் திரும்ப விரும்பம் தெரிவித்துள்ள 6 ஆயிரத்து 489 அகதிகள் செல்ல வசதியாக இரண்டு கப்பல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. முதலாவது கப்பல் இம்மாதம் பிப்ரவரி 27-ஆம் தேதி இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்குப் புறப்படுகிறது. தயாராகவுள்ள 3 ஆயிரத்து 410 அகதிகளைப் பதினைந்து பயணங்களில் இலங்கைக்குக் கொண்டு செல்கிறது.

மற்றொரு கப்பல் சென்னையிலிருந்து திரிகோணமலைக்கு அடுத்த மாதம் (மார்ச்) முதல் தேதியன்று 3079 பேர்களை ஏற்றிச் செல்லத் தயாராக இருக்கிறது.

**இலங்கை அரசின் சலுகைகள்**

விருப்பத்துடன் தாயகம் திரும்பும் அகதிகளை வரவேற்று, சில சலுகைகளைச் செய்யத் தயாராக இருப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

1. இலங்கை சென்றதும் வரவேற்பு மையங்களில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தரப்படும் குடியமர்வுப்படி (Settling-in-Allowance) ரூ.2,000-இல் முதல் தவணை.

2. அனைவருக்கும் சமைத்த உணவு.

3. வயது வந்த அனைவருக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை.

4. தங்கள் கிராமங்களுக்கோ, புனர்வாழ்வு மையங்களுக்கோ செல்லவும், உடைமைகளை எடுத்துச் செல்லவும் உதவி.

5. நேரடியாகத் தங்களது சொந்தக் கிராமங்களுக்குக் குடியமரச் செல்வோருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டது போக, மீதி குடியமர்வுப் படி, வழங்கப்படும்.

6. உற்பத்திப் பெருக்கக் கொடை (Productive Enterprises Grant) ரூ.4,000 வழங்கப்படும்.

7. சொந்த நிலத்தில் திரும்பவும் அவரவர் வீட்டைப் புதுப்பிக்கத் தவணைக் கொடை ரூ.15 ஆயிரம்

தரப்படும். இச்சலுகை பெறத் தகுதியில்லாதவர்களுக்கு 6 சத விகித வட்டியுடன் 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய வீட்டுக்கடன் ரூ.2 இலட்சத்து 50 ஆயிரம் வரை வழங்கப்படும்.

8. வாணிகம் நடத்திக் கலவரத்தால் அந்நிறுவனங்கள் சிதைந்து போனவர்களுக்கு வாணிகத்தைத் திரும்ப நடத்தும் வகையில் 9 சதவிகித வட்டியுடன் 10 ஆண்டுக் காலத்துக்குள் திருப்பிச் செலுத்தக் கூடிய வணிகக் கடன் ரூ.5 இலட்சம் வரை நிதியுதவி செய்யப்படும்.

9. மீண்டும் குடியமர்த்தப்பட்ட நாளிலிருந்து 3 மாத காலத்திற்கு உணவுப் பொருட்கள் உணவு வில்லைகளாக (Food Stamps) அளிக்கப்படும். இச்சலுகை 6 மாதம் வரை நீடிக்கப்படலாம்.

10. இது தவிர, ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவர்களது சொந்த இடத்தில் தற்காலிகக் குடிசைகள் அமைக்கத் தேவையானோருக்கு ரூ.500 வழங்கப்படும்.

**பொது அலுவலர்கள்**

அகதிகளாக வந்த இலங்கை அரசின் பொது அலுவலர்கள் மீண்டும் தாயகம் திரும்பும்போது ஏற்கெனவே அவர்கள் வகித்து வந்த பணிகளில் சேரப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை எண் 9-92, நாள் 21.2.92ன்படி கோரிக்கை விடுக்கலாம்.

புனர்வாழ்வு மையங்களில் தங்குவோர்க்கு அம்மையங்களில் உணவு, உறைவிடம், குடிநீர், சுகாதாரம் போன்ற வசதிகள் செய்துதரப்படும். அவர்கள் குழந்தைகளுக்குப் பாலர் பள்ளிகளில் கல்வி அளிக்கப்படும். வயது வந்த ஆண், பெண் இருபாலருக்கும் தொழிற்பயிற்சி அளிக்கப்படும்.

இது தவிர, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் சபை (UNHCR) அலுவலர்கள் கீழ்க்கண்ட கூடுதல் உதவிகள் வழங்கக்கூடும்:

அ. தற்காலிகக் குடியிருப்புகள் அமைக்க ஒவ்வொரு குடும்பத்திற்கும் உச்சமாக ரூ.4,500 மதிப்புள்ள பொருட்கள்.

ஆ. குடும்பங்களுக்கு அடிப்படைத் தேவையான பாய், பானை போன்ற சில பொருட்கள் வழங்கப்படும்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை தமது சமுதாய மேம்பாட்டுத் திட்டமான நலத் திட்டங்கள் (Micro Projects) மூலமாக சாலைகள், பாலங்கள், பள்ளிகள் இவற்றைப் பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் உதவுகிறது.

முன்னரே, தங்கள் தாயகம் திரும்பிய அகதிகளிடமிருந்து இங்குள்ள அவர் உறவினர்களுக்கு வந்த கடிதங்கள் மூலமும் இந்தச் சலுகைகள் கிடைப்பது தெரிய வந்துள்ளதாக வருவாய்த்துறை ஆணையர் தெரிவித்தார். எனவே, தங்கள் தாயகத்திற்குத் திரும்ப விருப்பம் தெரிவிக்கும் அகதிகள், தாங்கள் தங்கியிருக்கும் முகாம் அலுவலர்கள் அல்லது வருவாய்த் துறை ஆணையரையோ உடன் தொடர்பு கொண்டால் அவர்கள் இலங்கை செல்ல ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்று வருவாய்த்துறை நிர்வாக ஆணையர் திரு மு ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

## சுயமாகச் சட்டத் தொழில் தொடங்கும் ஆதிதிராவிடர்களுக்கு உதவி

**ஆ**திதிராவிடர் மக்களின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்களுள், ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகள் சுயமாகச் சட்டத் தொழிலை மேற்கொள்வதற்காக ஊக்குவிப்பு நிதி உதவி வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 21 ஆதிதிராவிட சட்டப் பட்டதாரிகள் இந்த நிதி யாண்டில் (1994-95-ஆம் ஆண்டில்) தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

சுயமாகச் சட்டத் தொழிலைத் தொடங்கவுள்ள இந்த 21 சட்டப் பட்டதாரிகள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 3,000 வீதம் மொத்தம் 63,000 ரூபாய் உதவித் தொகை வழங்கி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

# தமிழ் ஆட்சி மொழி

மாண்புமிகு கல்வி அமைச்சர்
பேராசிரியர் க. பொன்னுசாமி

மொழியை மையமாக வைத்து, மக்களை ஒன்றுபடச்செய்து அதன் மூலம் மொழி தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் நோக்கத்துடன்தான் நாடு விடுதலை பெற்றதும் இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டன.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக வெள்ளையர்கள் இந்தியாவை ஆண்டதன் விளைவாக, ஆட்சிமொழிச் சிக்கல் இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் தோன்றியது. ஆங்கிலம் நம்முடைய இரத்தத்தில் ஊறி விட்டது. எந்த விஞ்ஞானச் சாதனமும் நுழையாத சின்னச் சின்னக் கிராமங்களில்கூட ஆங்கிலம் புகுந்துவிட்டது. mile, watch, time, case, count, hearing equal, adjust என்று எத்தனையோ சொற்கள் தமிழர்களிடம் இயல்பாகப் புகுந்துவிட்டன. ஆங்கிலேயர் போன பிறகும் ஆங்கிலம் போகவில்லை. மாறாக ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பிடித்துக்கொள்ள முயன்றது.

மொழி நமக்குப் பல துறைகளில் பயன்படுவதாக இருக்கிறது. தாய்மொழி, கல்வி மொழி அல்லது பயிற்றுமொழி, வழிபாட்டு மொழி, தொடர்புமொழி, ஆட்சி மொழி எனப் பல நிலைகளில் மொழி செயலாற்ற வேண்டும். தமிழ்நாட்டில் தாய் மொழி தமிழ். கல்விமொழி தமிழும் ஆங்கிலமும். வழிபாட்டுமொழி தமிழும் சமஸ்கிருதமும். தொடர்பு மொழி (பிற அரசுகளோடு) ஆங்கிலம். ஆட்சி மொழி தமிழ்.

1956-ஆம் ஆண்டு தமிழக அரசு ஆட்சிமொழிச் சட்டத்தைக் கொண்டுவந்து தமிழையே ஆட்சி மொழி என்று அறிவித்தது. விடுதலைபெற்று ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்புதான் தமிழ் ஆட்சிமொழி என்ற நிலையைப் பெற முடிந்தது. தமிழ்நாட்டில் தமிழும், வெளித்தொடர்பிற்கு ஆங்கிலமும் என்று 1956-இல் முடிவு செய்யப்பட்டது.

1965-இல் மத்திய அரசு தீவிரமாக இந்தியைத் திணிக்க முயன்றதன் விளைவாகத் தமிழகத்தில் பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. இதன் விளைவாக மத்திய அரசு இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே நீடிக்கும் என்று உறுதிமொழி அளித்தது. ஜவகர்லால் நேரு பிரதமராக இருக்கும் போதே இணைப்பு மொழி பற்றிய கருத்து வேறுபாடுகள் தோன்றிவிட்டன.

"English may continue" என்று உறுதிமொழி கொடுப்பதா "English shall continue" என்று உறுதிமொழி கொடுப்பதா என்ற சிக்கல் இருந்தது. பேரறிஞர் அண்ணாவும், மூதறிஞர் இராஜாஜியும் shall என்றுதான் இருக்க வேண்டும் என்றார்கள். மொரார்ஜி தேசாய் போன்றவர்கள் May என்பதே போதுமென்றனர். நேரு May, shall இரண்டுக்கும் அர்த்தம் ஒன்றுதான் என்றார். உடனே இராஜாஜி அப்படியானால் shall என்றே போட்டுவிடுங்களேன் என்றார். இப்படி ஒரு சொல்லில் நம்முடைய தொடர்புமொழி உரிமை ஊசலாட்டம் ஆடியது.

ஒரு வழியாக நாம் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்கும் என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் உள்நாட்டில் நம்மை ஆளும் மொழியாகத் தமிழ் வளர்ந்ததா என்பதை நாம் கருதிப் பார்க்க வேண்டும்.

ஆட்சிமொழிக் கருத்தில் தமிழகத்தின் பெரும்பான்மையான மக்களின் கருத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்களே முதன்முதலாக, மிகத்தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

இந்தியாவில் பெரும்பான்மையானவர்களின் தாய்மொழி இந்தி. ஆகவே இந்தியாவின் தாய்மொழியாக இந்தியே இருக்கட்டும் என்று வடஇந்தியாவில்



பலர் கூறினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்தியாவில் மயிலைவிடக் காக்கைகள் தான் நிறைய இருக்கின்றன; எனவே தேசியப் பறவையாகக் காக்கையை வைத்துக் கொள்ளலாமா என்று கேட்பதுபோல் தான் இந்தியைத் தேசியமொழி ஆக்குவது என்றார்கள். மேலும் அவர்,

"இந்தியாவில் இந்தியை மட்டுமே ஆட்சிமொழியாகக் கொள்வது இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட 'நல்ல கால்' உடையவர்களுக்கும், இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத 'ஊனக்கால்' உடைவர்களுக்கும் இடையே வைக்கும் ஓட்டப் பந்தயம் போன்றது'' என்று கூறினார்.

**1965**– இந்தி எதிர்ப்புப் போரில் தீக்குளிப்பு உயிர்த் தியாகம் செய்தோர்க்கு, தமிழுக்காக உயிர்த் தியாகம் செய்தோர் குடும்பத்தாருக்கு நம் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.50,000 வழங்கியிருக்கிறார்கள்

தமிழகத்தைப் பொறுத்த வரை தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிகளே போதும் என்று தொனித்து இருமொழிக் கொள்கையை நிறைவேற்றினார்கள்.

இந்த நிலையில்தான் தமிழகத்தில் தமிழ் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை செலுத்தப்பட்டது. 1968-இல் தமிழ் வளர்ச்சித்துறை என்ற துறை உருவாகியது. சபாநாயகர், அக்ராசனர், கனம், நமஸ்காரம், ஸ்தீரிகள், விவாஹ சுபமுகூர்த்தம், ஸ்திரீ சந்தோஷம், ஜனநாயகம், கும்பாபிஷேகம் போன்ற சொற்களெல்லாம் மறைந்து அவைத்தலைவர், நிகழ்ச்சித் தலைவர், மாண்புமிகு, வணக்கம், மகளிர், திருமணம், மகிழ்ச்சி, குடியரசு, குடமுழக்கு என்ற சொற்கள் எல்லாம் தோன்றின.

அண்ணா ஆட்சி ஏற்பதன் முன் மராமத்துத் துறை என்றொரு துறை இருந்தது. அது பொதுப்பணித்துறை என்று மாற்றப்பட்டது. பொது மக்களோடு அதிகாரிகள் தமிழில் பேசவும், அரசுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தமிழில் அனுப்பப்படவும் அறிஞர் அண்ணா காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ் ஆட்சிமொழி என்ற நிலையில் பல புதிய வளர்ச்சிகள் தோன்றின. தமிழை ஆட்சிமொழியாகச் சிறப்பாகப் பயன்படுத்தும் தலைமை அலுவலகம் மாவட்ட அலுவலகம் ஆகிய வற்றுக்குச் சான்றிதழ் வழங்குவதோடு பாராட்டு, பரிசு ஆகியவை வழங்கப்பட்டன. தமிழில் சிறந்த வரைவு எழுதுவோருக்குப் பரிசுதரும் திட்டம் சிறப்பாகச் செயல்படத் தொடங்கியது.

இவ்வளவெல்லாம் செய்தும் மக்கள் மனநிலையில் ஒரு வேகமான மாறுதல் நிகழவில்லை. தெருவுக்குத் தெரு ஆங்கிலப் பள்ளிகள். அங்குப் போதுமான வசதிகள் இருக்கின்றனவா என்றெல்லாம் பார்க்கமாட்டார்கள். நன்றாகச் சொல்லிக் கொடுக்கிறார்களா என்பது பற்றிக் கவலைப்படமாட்டார்கள். ஆங்கிலம் சொல்லித் தரும் பள்ளிக்கூடம் என்று இருந்தால் போதும்; இந்த நிலை ஏன்?

''Twinkle Twinkle Little Star'' என்று தன் பிள்ளை பாடிவிட்டால்போதும். அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் சிறிது வசதி இல்லாவிட்டாலும் ஏற்றுக் கொள்ளாத மக்கள் ஆடு மாடுகளை அடைக்கும் பட்டிகளைப் போன்ற ஆங்கிலப் பள்ளிகளில் நம் பிள்ளைகளைச் சேர்க்கின்றார்களே ஏன்? ஆங்கில மோகம்.

அந்த மனநிலை மாறும் போதுதான் தமிழ் ஆட்சிமொழி நூற்றுக்கு நூறு வெற்றி பெறும். இதற்குத் தமிழக அரசு என்ன செய்தது என்று கேட்கலாம். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் மிக நன்றாகச் சிந்தித்து மழலையர் பள்ளிகளில் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படவேண்டும் என்று ஆணையிட்டார்கள். அந்த நிலையிலிருந்து தமிழ் படித்துவந்தால், ஆட்சிமொழித் திட்டத்திற்கு உறுதி உண்டாகும் என்பது அவர்கள் கருத்து. மழலைப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையில் இன்று யாவரும் தமிழ் கற்றாகவேண்டும் என்ற கருத்து ஏற்கப்பட்டுவிட்டது. இதுதான் புரட்சித்தலைவியின் தமிழக அரசு செய்துள்ள மாபெரும் தமிழ் வளர்ச்சிப் பணிக்கு உரிய அடிப்படையாகும்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் காணப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு ஆகியவை வளர்ந்து– புரட்சித்தலைவியின் ஆட்சியில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடும் பெருமையை அடைந்துள்ளன.

இந்த ஆட்சியில் தமிழ் மேலும் வளரும்; தமிழ் ஆட்சி மொழியாக எல்லா நிலைகளிலும் பயன்படும்.

**–எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், மூன்றாம் நாள் நடந்த கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.**



# ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்க மாண்புமிகு முதல்வர் ஆணை

கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் (Oriental Manuscript Library) ஒன்று தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் சார்பில் (Directorate of Archaeology) சென்னைப் பல்கலைக் கழக நூலகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்நூலகம் ஆசியாவில் உள்ள சிறப்பான நூலகங்களில் ஒன்றாகும். தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மராத்தி, கன்னடம், உருது, பாரசீகம், சிங்களம், பர்மிய மொழி போன்ற பல்வேறு மொழிகளில் உள்ள ஓலைச் சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் இந்த நூலகத்தில் பராமரிக்கப்பட்டு வ்ருகின்றன. இலக்கியம், வரலாறு, தத்துவம், அறிவியல், ஜோதிடம் போன்ற துறைகளில் 71,180 சுவடிகள் இந்நூலகத்தில் உள்ளன.

கர்னல் கோலி மெகன்ஸி, டாக்டர் லெயிடன் மற்றும் திரு சி.பி. பிரௌவுன் ஆகியோர்களால் ஆரம்பத்தில் சேகரிக்கப்பட்ட இந்த ஓலைச் சுவடிகள்ளை வைத்து, இந்த நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு குறிப்புகளைப் பெறுவதற்கு வசதியாக 22,887 நூல்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் இந்நூலகத்தில் உள்ள சுவடிகளில் இருந்து இதுவரை 355 நூல்கள் பெயர்த்தெழுதி வெளியிடப்பட்டுள்ளன. அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் வரிசை (Government Oriental Manuscript Series) என்ற தலைப்பில் இந்நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

மடல் திரட்டு, நலங்கு மெட்டு, இராமாயணம், நீதிக்கதைகள், துளுவ நாடகம் போன்ற நூல்கள் தமிழ்ச் சுவடிகளில் இருந்து பெறப்பட்டு அச்சிடப்பட்டு, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி தஞ்சாவூரில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் வெளியிடப்பட்டன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கீழ்த்திசையில் ஓலைச் சுவடிகள் நூலகம் மேலும் நன்முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்றும், ஓலைச் சுவடிகள் காலச் சுழற்சியால் அழிந்துவிடாமல் அவற்றை நவீன முறையில் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், ஆணையிட்டார்.

இந்த நூலகத்தில் உள்ள சுவடிகளில் அச்சிடுவதற்குத் தகுதியான சுவடிகளைத் தேர்வு செய்வதற்கு, ஒரு வல்லுநர் குழுவை அமைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். பன்மொழிப் புலமை பெற்ற வல்லுநர்கள் குழுவும், தொல்பொருள் ஆய்வுத் துறையின் அலுவலர்களும் இப்பணியில் ஈடுபடுவார்கள்.

# தமிழ்நாடு மின்வாரியம் சுயநிதித் திட்டம்

தமிழகத்தில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் மின்சார இணைப்பு வழங்கக் கோரி ஏராளமான மனுக்கள் பெறப்பட்டுள்ளதால் தமிழ்நாடு மின்வாரியம் சுயநிதித் திட்டம் (Self Financing Scheme) ஒன்றைத் துவக்கி 25,000 ரூபாய் டெபாசிட் செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

சுயநிதித் திட்டத்தின் கீழ் மின்வாரியத்

திற்கு டெபாசிட் செலுத்த வேண்டிய தொகை அதிகமாக இருப்பதாகவும், அந்தத் தொகையைக் குறைத்தால் இத்திட்டத்தின் கீழ் பம்புசெட்டுகளுக்கு முன்னுரிமை அடிப் படையில் மின்சாரம் பெறுவதற்குத் தமிழக விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும் என்றும் ஒரு கோரிக்கை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்பு வைக்கப் பட்டது.

அந்தக் கோரிக்கையைக் கனிவுடன் பரி சீலனை செய்த மாண்புமிகு தமிழக முதல மைச்சர் அவர்கள், சுயநிதித் திட்டத்தின் கீழ் விவசாயத்திற்கு வழங்கப்படும் பம்புசெட்டு களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்புப் பெறுவதற்கு இனிமேல் 25,000 ரூபாய்க்குப் பதிலாக 10,000 ரூபாய் மட்டும் டெபாசிட் தொகையாகச் செலுத்தினால் போதும் என்று ஆணை பிறப்பித்துள்ளார். மேலும், அவ்வாறு முன்னுரிமையின் அடிப் படையில் மின் இணைப்பு வழங்கப்படும் பம்புசெட்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்குப் பயன்படுத்தப்படும் பம்புசெட் திறனைப் பொறுத்து ஒரு குதிரைத் திறனுக்கு (Horse Power) 250 ரூபாய் வீதம் மின் கட்டணம் செலுத்துவதற்கும் இந்தப் புதிய திட்டத்தின் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மின் பயனீட்டாளரின் விருப்பத்தின்படி பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு ஏற்ப ஆண்டுக் கட்டணமாக 250 ரூபாய் மட்டுமோ அல்லது ஒரு யூனிட்டுக்கு 50 காசு வீதமோ கட்டணமாகச் செலுத்தலாம். இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 40,000 புதிய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும். இதன்மூலம் தமிழகத்தில் மின் இணைப்பு கேட்டு, தேக்கத்தில் உள்ள அனைத்து விண்ணப்பங்களும் பரிசீலிக்கப் பட்டு மின் இணைப்பு வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

## சிறைத்துறை நிர்வாகம் செம்மைப்பட மாண்புமிகு முதல்வர் ஆணை

தமிழகச் சிறைச்சாலைகள் துறையின் நிர்வாகத்தினை நவீனப்படுத்தும் வகையிலும், அதற்கு ஏதுவாகச் சிறைச்சாலைகளின் அன்றாடப் பராமரிப்புக்குத் தேவைப் படுகின்ற பல்வேறு வசதிகளை மேம் படுத்துகின்ற வகையிலும், வகுக்கப்பட்டி ருக்கின்ற 'சிறைச்சாலைகள் நிர்வாகம் நவீனப்படுத்துதல்' திட்டம் ஒன்றிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்து, அதற்காக மொத்தம் ரூ.270 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித் துள்ளார்.

இந்த நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அமைந் துள்ள சிறைச்சாலைகளில், சிறைத்துறை நிர்வாகத்தினைச் செம்மைப்படுத்தும் விதத் தில் கீழ்க்காணும் பல்வேறு வசதிகள் செய்து தரப்படும். அவையாவன:

1. சிறைச்சாலைகளின் சுற்றுச் சுவர்களை உயர்த்துதல் (Raising of Compound Walls)

2. சிறைக் கைதிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க, வீடியோ கேமராக்கள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள்.

3. விரைந்த தொலைத் தகவல் தொடர்பு ஏற்படுத்த ஏதுவாக பேக்ஸ் வசதி, மைக்ரோ வேவ் தொலைபேசி வசதி, வயர்லெஸ் தொடர்புக் கருவிகள் முதலியவற்றை வழங் குதல்.

4. சிறைத்துறை அதிகாரிகளுக்குத் தேவை யான ஜீப், வேன், கார்.

5. மத்திய சிறைச்சாலைகளில் நவீன நீராவி முறையிலான சமையல் கூடங்கள்.

6. சிறைத்துறைக் காவல் துறைத் தலைவரின் அலுவலகம் மற்றும் மத்திய

சிறைச்சாலைகளின் நிர்வாகம் கணிப்பொறி மயமாக்கப்படுதல்.

7. சிறைத்துறை அலுவலர்களுக்குக் கணிப்பொறி இயக்கப் பயிற்சி மற்றும் சிறைத்துறையின் கீழ் இயங்கும் பல்வேறு சிறு தொழில் சாலைகளை நவீனப்படுத்துதல்.

8. சிறைச்சாலைகளில் உள்ள மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே, ஜெனரேட்டர் முதலிய வசதிகள் ஏற்படுத்தித் தருதல்.

9. பெண் மற்றும் சிறுவர், சிறுமியர் கைதிகளுக்காகத் தையல் கூடை, பாய் முடைதல், பைண்டிங், லாமினேஷன் செய்தல் முதலிய சிறுதொழில்களில் பயிற்சி அளித்தல்.

முதலிய பல்வேறு வசதிகளை இந்தப் புதிய நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு உடனடி யாகச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

## கள்ள வீடியோ ஒழிப்புக் காவலர் பிரிவு

சென்ற ஆண்டு தமிழகத் திரைப்படத் துறையில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையில், தமிழ்த் திரைப் படத் துறையைச் சேர்ந்த நடிகர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் ஆகியோருக்கிடையேயான பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது, தமிழ்த் திரைப் படத் துறையினரின் பல்வேறு கோரிக்கைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றுள் திரைப்படத் தொழிலை நசித்து வரும் திருட்டு வீடியோ புழக்கத்தை (Video Piracy)காவல் துறையினரின் உதவி கொண்டு கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று திரைப்படத் தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டார்கள்.

இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இதற் காக ஒரு தனிப் போலீஸ் பிரிவு ஒன்று துவக் கப்படும் என்று அறிவித்தார். அதனையடுத்து தற்போது, மாநில அளவில், குற்றப் பிரிவு காவல் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டிற் குக் கீழ் இயக்கக் கூடிய "கள்ள வீடியோ ஒழிப்புக் காவலர் பிரிவு" ஒன்றினை அமைக்க 58 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட் டுள்ளார்.

சென்னை நகரைப் பொருத்தவரையில் ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர், ஒரு துணைக் காவல் துறை கண்காணிப் பாளர், ஒரு காவல் ஆய்வாளர், இரண்டு இரண்டாம் துணை ஆய்வாளர்கள், நான்கு முதல் நிலைக் காவலர்கள், இரண்டு இரண் டாம் நிலைக் காவலர்கள் ஆகியோர் இந்த சிறப்புப் பிரிவில் பணியாற்றுவார்கள். மேலும், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, இந்தப் புதிய "கள்ள வீடியோ ஒழிப்புப் பிரிவு" செயல் படும். மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு தலைமை யிடத்திலும், ஒரு காவல் துறை ஆய்வாளர் மற்றும் இரண்டு காவலர்கள் ஆகியோரைக் கொண்டு இந்தப் படை இயங்கும்.

இந்தப் புதிய காவல் துறைப் பிரிவு, வீடியோ தொடர்பாக தமிழக அரசு இதுவரை பிறப்பித்துள்ள சட்டங்களை அமல்படுத்து வதிலும், திருட்டு வீடியோவில் ஈடுபட்டுள்ள வர்களைச் சட்டத்தின் முன்பு நிறுத்தும் பணியிலும் முழுமையாக ஈடுபடும்.

# உலகப் பொது மொழி


## பேராசிரியர் பா. இராமச்சந்திரன்

### முன்னாள் கேரள மாநில ஆளுநர்


உலகம் ஒரு குடும்பமாகச் சுருங்கிக்கொண்டிருக்கும் அறிவியல் காலம் இது. ஆனால், மிகப் பழைமையான தமிழ் இலக்கிய நூல்கள் முதல் நூற்றாண்டிற்கு முன்பேயே உலகெலாம் உணர்ந்து ஒரு குடும்பமாகப் போற்றத் தொடங்கின. எந்த ஒரு சிந்தனையையும் உலகத்திற்குப் பயன்படுமாறு சிந்தித்துச் சொல்லின. நல்லவற்றை மட்டுமே போதித்தன. சான்றோர்கள், சமுதாயத்திற்குத் தங்கள் பெயர் சென்றடைவதைவிடத் தங்கள் எண்ணம் போய்ச் சேர்வதையே விரும்பினார்கள். அறிவுரை சொல்வதைவிட, இயற்கை இது என்ற உண்மையை உணர்த்திட முனைந்தார்கள்.

தமிழ் இலக்கியம் இருபத்தைந்து நூற்றாண்டுக் காலப் பழைமை உடையது. தமிழ் இலக்கியத்தில் பழைமையானது சங்க இலக்கியம். அமைதியான வாழ்வையே அந்த இலக்கியம் போதித்தது. மன உணர்வில் காதலும், வீரமும் சிறப்பானவை. காதல் பற்றிய கற்பனையை 'அகம்' என்றும், வாழ்க்கைத் துறைகளான வீரம், கொடை முதலியன 'புறம்' என்றும் பாகுபாடு செய்தன. இம்மரபு வேறு எந்த நாட்டிலும் போற்றப்படவில்லை என்றே கூறலாம். காதல் பற்றிய பாடல்களில் உடல் வருணனை மிகுதியாக இல்லை. காமச் சேர்க்கையைப் பற்றிய குறிப்புகளும் மிகுதியாக இல்லை. காதலரின் உள்ளத்து உணர்வு பற்றிய பாடல்களே மிகுதியாக உள்ளன. அதிலும், அவர்கள் பெயர்கள் இல்லை. காதல், வீரம் முதலிய பொருளைப் பாடினாலும், அந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியாக இயற்கைக் காட்சிகளை அமைத்துப் பாடினர். இயற்கை வருணனை மிகுதியாக இருந்தது. ஆனால், இயற்கையின் அழகில் ஈடுபட்டு இயற்கையை வருணிப்பதே நோக்கமாக இல்லை. மக்களின் உணர்வுக்கு அவை பின்புயமாக அமைந்திருப்பதையே அகப்பாட்டுக்கள் விளக்கின.

அக்காலத்து வேந்தர்கள் வீரம் நிறைந்தவர்களாக, போருக்கு அஞ்சாதவர்களாக விளங்கியது போலவே, அன்பு நிரம்பியவர்களாகவும், நீதிக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் விளங்கினர். புலவர்களுக்கு அவர்களிடம் பெருஞ் செல்வாக்கு இருந்தது. அவர்களுடைய அறிவுரை, அறவுரை எல்லாம் கேட்டார்கள். சமய வேறுபாட்டைக் கடந்த வாழ்வையே புலவர்களும் பாடினர். வேந்தரும் ஏற்றனர். கலைகளையும் மன்னர்கள் ஆதரித்தனர். மக்களும் போற்றினர். மன்னர் பலரும் புலவராகவும் விளங்கினர்; புரவலராகவும் விளங்கினர்.

**(எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து)**

உயர்ந்த உண்மைகளையே இலக்கியம் உணர்த்தியது. 'தன்னலம் இல்லாமல், பிறர் நன்மையே நாடி உழைக்கும் சான்றோர் இருப்பதால்தான் இந்த உலகம் இருக்கிறது' என்ற உண்மையும், தீமையோ, நன்மையோ– யாரோ நமக்குச் செய்வதால் வருவதல்ல; துன்பம் கொள்வதோ, இன்பம் பெறுவதோ அவ்வாறே, பிறரால் வருவதல்ல என்பது போன்ற உண்மைகள்பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

காதல், வீரம், கொடை பாடிய புலவர்கள் அடுத்து நீதிகளைப் பாடவும் முனைந்தனர். நீதி நூல்களுள் சிறந்தது திருக்குறள். நாமெல்லாம் அறநெறியில் அழுத்தமான நம்பிக்கை கொள்ள வேண்டும் என உணர்த்தியவர் வள்ளுவர். 'மறந்தும் பிறர்க்குக் கெடுதியானவற்றை எண்ணக்கூடாது; அவ்வாறு எண்ணினால் எண்ணியவருக்கே கெடுதி விளையும்', 'பெற்ற தாயின் பசியையே காண நேர்ந்தாலும் சான்றோர் பழிக்கும் தீய செயல்களால் பசியைப் போக்க வேண்டாம்' எனப் பல

நீதிகளைக் கூறுவது குறள். குறிப்பிட்ட சமயம், சடங்கு முதலியவற்றை வற்புறுத்தவில்லை. தம் கொள்கைகளையும் திணிக்கவில்லை. அடிப்படை உண்மைகளை, உலகினுக்குப் பொதுவாக உள்ளவற்றை விளக்குகிறது குறள்.

வாழ்க்கையில் படிப்படியாக வளர்ந்து முழுமை பெறுவதற்குத் திருக்குறளின் அறத்துப் பால் ஒன்றே போதும். அன்பின் அடிப்படையிலிருந்து அருளின் நிறைவு தோன்றும் என்பதைப் புரிய வைக்கிறது.

சங்க காலம், நீதி நூல் காலம் ஆகியவற்றின் பின், பக்தி இயக்கக் காலம் தோன்றியது. அப்போதும் தமிழை மறந்தார் இல்லை. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினார் ஞானசம்பந்தர். தமிழோடு இசைப்பாடலை மறந்தறியாதவராக விளங்கினார் திருநாவுக்கரசர். அன்போடு உருகி அகம் குழையக் கற்றுக் கொடுத்தவை நம் தமிழ் பக்திப் பாடல்கள். மண்ணில் நல்ல வண்ணம் வாழக் கற்றுக் கொடுத்தவை அவை. இறைவனுக்கு முன் எல்லோரும் சமம் என்பதை உணர்த்தியவை அவை. உயர்வு, தாழ்வு புறக்கணிக்கப்பட இப்பாடல்கள் உதவின.

விடுதலைக்கும் வேண்டிய பணிகளை ஆற்றியது தமிழ் இலக்கியம்.

*"பாரத தேசம் என்று பெயர்*
*சொல்லுவார்; மிடிப் பயம்*
*கொல்லுவார் துயர்ப் பகை*
*வெல்லுவார்"*

—என்றார் பாரதி. சுதந்திரத்தையே தெய்வமாக வழிபட்டார் அவர். நாட்டுப்பற்றையும், நாட்டு ஒருமைப்பாட்டு உணர்வையும் வற்புறுத்தினார். அதைப் போலவே, பாரதியின் சமுதாய உணர்வும் ஆழமானது. 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என விரும்பினார். 'அறியாமையைப் போக்க வேண்டும்' என வற்புறுத்தினார். 'கஞ்சி குடிப்பதற்கில்லார், அதன் காரணங்கள் இவை என்னும் அறிவுமில்லார்' என்பதனை வெளிப்படுத்தினார். 'ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை சாதியில்' என முழங்கினார். விடுதலை வேள்வியில் இருந்தாலும், சமுதாயத்தின் மீதிருந்த அக்கறையை வெளிக்காட்டாமல் இருந்ததில்லை.


சங்க காலம் தொடங்கி, 'மனித நேயத்தை' வலியுறுத்தும் தமிழ் இலக்கியம், மொழிமீதும் பெரிதும் கவனம் செலுத்தி வந்தது. அதனால்தான் பாரதி கூட "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று உணர்ந்து போற்றினார். தமிழை முழுமையாக நமக்கு உணர்த்தினார். எல்லாக் கல்வியையும் தமிழால் கற்பிக்க முடியும் என விளம்பினார். "கலைச்செல்வம் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என முழங்கினார் பாரதி. ஏனெனில், துறைதோறும் தமிழ் வளர வேண்டும் என்ற எண்ணம். எனவே, பாரதியால் தமிழ் தகுதி பெற்றது எனப் 'பாவேந்தர்' போற்றியது பொருத்தமே.

தமிழை உலகம் தழுவிய மொழியாக வளர்ப்பது இந்தியாவிற்கும், தமிழகத்திற்கும் நல்லதாகும். அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளில் அறிஞர்களும், ஆர்வலர்களும் செயல்பட வேண்டும். தமிழைப் பாதுகாக்கும் முயற்சிக்குப் பொது மக்களும் என்றும் துணை நிற்பார்கள்.

ஆனால், அதன் வளர்ச்சி அந்தந்தத் துறை அறிஞர்களையே சாரும். அவர்கள் முயற்சியும், ஆராய்ச்சியும் மக்களுக்கு எளிதில் சேரும் வண்ணம் அமைய வேண்டும் என்பதை உணர வேண்டும்.

கலை வேறு, அறிவியல் வேறு என்றிருந்த காலமும் இருந்தது. இன்று அறிவியலுக்கும், கலைக்கும் உள்ள வேறுபாடு விரைவாக மறைந்து கொண்டிருக்கிறது. கலைத்துறையை அறிவியல் முறையால் சிறந்ததாக்கிக் கொண்டிருக்கிறோம். அறிவியல் துறையைச் செம்மையாக்கியது கலைத்துறையாகும். இவற்றை உணர்த்த வேண்டியது அறிஞர்கள் கடமை. மொழியை மறந்தால் பேசியவர் அடிமை யாவார். மொழி வளராமல் போனால் முன்னேற்றம் இல்லாமல் போகும். அறிவியல் துறைகள் பெருமளவில் தமிழில் வளர வேண்டிய நேரம் இது. தமிழில் பொறியியல் துறை வளரும் அறிகுறி தோன்றியிருக்கிறது. மருத்துவத்துறையும் பிறவும் வளர வேண்டும்.

மனிதரையும், மன உணர்வையும் ஆராய்ந்து அவற்றைப் பாட்டில் பதிவு செய்த நம் முன்னோரின் அறிவியல் நுட்பம், நம் மொழிக்கு இருந்த திட்பம் இன்று இல்லாமல் போகுமா? மொழியைப் புதுப்பிக்கும் பணியிலும் பழையனவற்



றைத் தேடும் பணியிலும் அறிஞர்கள் ஈடுபட வேண்டும். அரசியல், சமயம் என வேறுபட்டிருந்தாலும் "தமிழ்" என்கிறபோது ஒன்றுபட்டு உழைத்திட வேண்டும். வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் கருவி கணிப்பொறி. வாழ்க்கையிலும் அரசின் பல துறைகளிலும் கணிப்பொறி பயன்பட்டு வருகிறது. தகவல் தொடர்பு, கணக்கியல், வானியல், போக்குவரத்து, வேளாண்மை, மருத்துவம், தொழிலியல், விண்வெளி ஆய்வு முதலிய பல துறைகளிலும் கணிப்பொறி பெரிதும் பயன்படுத்தப்பட வேண்டும்.

போக்குவரத்தும், செய்தித் தொடர்பும் உலகினைச் 'சுருங்கியதாக' மாற்றி விட்டன. ஆராய்ச்சிகள் பெருகி உலகம் முழுவதும் புதிய புதிய செய்திகளும், கருத்துக்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பிறநாடுகளில் நடப்பவற்றை உடனடியாகத் தெரிந்துகொள்ள வேண்டிய காலம் இது. தெரிந்து கொள்வதுடன் தொடர்பு கொள்ளவும் வேண்டும். அதற்குத் துணைபுரிவது மொழி பெயர்ப்பு. மொழிபெயர்ப்பில் முக்கியப் பங்காற்றுவது கணிப்பொறி. சோர்வோ, சலிப்போ இல்லாமல் பணியாற்றும். விரைவாகவும் அதிகமாகவும் மொழி பெயர்க்கும். இரு மொழிக்கு மேற்பட்ட புலமை எல்லோர்க்கும் எளிதல்ல. ஆனால், கணிப்பொறி சாதிக்கும். கணிப்பொறி பற்றிய அறிவு நமக்கு வேண்டுமானால் அத்துறைத் தமிழில் பலவாறு வளர வேண்டும். மொழியைக் கற்பிக்க, அகராதி தயாரிக்க, பேச்சுத் துறைக்கு, இலக்கியத்தினை ஆக்க என்று பல நிலைகளில் கணிப்பொறி உறுதுணையாகின்றது. மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கின்ற கணிப்பொறி பற்றித் தமிழில் பல சொற்களும் உருவாக்கப்பட வேண்டும். என்றும் வளர்மொழியாகத் தமிழ் விளங்க வேண்டும்.



**எழுத்து சுவைமிக்கதாக மட்டுமிருந்தால் போதாது. சுவையோடு கூடிய பயனும் உள்ளதாக இருக்க வேண்டும். அப்போது தான் முழு அளவு பாராட்டத்தக்க இலக்கியமாக - கவிதையாக அது திகழும்.**

**-பேரறிஞர் அண்ணா.**

*"பிறநாட்டு நல்லறிஞர்*
*சாத்திரங்கள் தமிழ் மொழியிற்*
*பெயர்த்தல் வேண்டும்*
*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல்*
*வேண்டும்.*

—என்றும்,

*"திறமான புலமையெனில்*
*வெளிநாட்டார்*
*அதை வணக்கம் செய்தல்*
*வேண்டும்"*

—என்றும் பாரதி கூறியதை இத்தமிழ் மாநாடு நோக்கமாகக் கொண்டு செயல்படட்டும்.

உலகில் உள்ள பிறமொழிகள் நம்மொழியில் காணும் கலைச் செல்வங்களை ஏற்றுத் தத்தம் மொழிகளை வளப்படுத்திக் கொண்டிருக்கின்றன. நாம் எந்த அளவிற்குச் செயல்பட்டிருக்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழை ஆட்சி மொழியாக்கச் சட்டம் கொண்டு வந்தோம். தமிழைத் தட்டச்சில் கொண்டு வந்தோம். அரசு பல நிறுவனங்களையும், கழகங்களையும், துறைகளையும் தமிழ் வளர்ச்சிக்காக உருவாக்கியது. இருப்பினும், தமிழின் வளர்ச்சி மேலும் ஏற்றம் பெறுதல் வேண்டும்.

இன்றைய மாநாடு உலகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கும் பணியில் தன் கவனத்தைச் செலுத்த வேண்டும். உலகில் காணும் முன்னேற்றம் உடனடியாகத் தமிழில் பதிவு செய்யப்பட வேண்டும். உலக மொழி அறிஞர்கள் இங்கு வருவதும், இங்குள்ளோர் பிற நாடுகளுக்குச் சென்று தமிழை மேம்படுத்துவதும் இன்றைய கட்டாயத் தேவையாகும். நிர்வாகத்திலும், தகவல் தொடர்பிலும், விண்வெளித் துறையிலும், மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் தமிழ் வளர்தல் வேண்டும். உலகப் பொதுமொழியாகும் தகுதியைத் தமிழ் பெறுதல் வேண்டும். அந்த நிலைதான் நமக்கும் பெருமை; தமிழுக்கும் பெருமை; இம்மாநாட்டிற்கும் பெருமை. அதற்கு ஆர்வலர்களும், அறிஞர்களும், அரசும் உறுதி ஏற்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

*'வாழ்க தமிழ்மொழி! வாழ்க*
*தமிழ்மொழி!*
*வாழ்க தமிழ்மொழியே!*
*வானம் அறிந்தது அனைத்தும்*
*அறிந்து*
*வளர்மொழி வாழியவே!*

- பாரதி

# தமிழகத்தில் புதியதோர் பொற்காலம்!

**மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்**
**திரு கே.ஏ. செங்கோட்டையன்**

**த**ஞ்சையில் நடந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் 'தமிழர் கண்ட சமுதாயம்' என்ற கருத்தரங்கம் (3.1.95) நடந்தது. இந்தக் கருத்தரங்கிறகு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே. ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலைமை தாங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழை, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எழுத்து வடிவம் கொண்ட தமிழை, ஈடு இணையில்லா இலக்கியங்களைப் படைத்த தமிழை, முடி மன்னர் மூவர் போற்றி வளர்த்த தமிழை, சங்கம் வளர்த்த தமிழை, சரித்திரம் படைத்த தமிழைப் போற்றுவதற்கு, புகழ்வதற்கு, பாராட்டுவதற்கு, பாதுகாப்பதற்குத் தமிழ் உணர்வு படைத்த எங்கள் தாய் விழாவெடுத்தால்... அதை விரயம் என்று விமர்சிப்பதா? வீண் வேலை எனப் புலம்புவதா?

தமிழ்கூறும் நல்லுலகம் நாளை இதற்குரிய தண்டனையை வழங்கியே தீரும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.


தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் தஞ்சை மண்ணைப் புரட்சித்தலைவி தேர்ந்தெடுக்க என்ன காரணம்? தமிழன் கலையால் தலை நிமிர்ந்து நிற்கின்ற இடம் தஞ்சைத் தரணி. இராஜராஜ சோழன் உலக நாடுகளை வென்றான். அது மட்டுமல்ல, ஒரு ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்குக் கூட உலகத்திற்கே வழிகாட்டியவன், தமிழ்ச் சமுதாயத்துத் தலைவரான இராஜராஜ சோழன். அவனுக்குப் பெருமை சேர்க்கவே, அவன் வாழ்ந்த இந்த மண்ணில்— நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி மகிழும் இந்தத் தஞ்சையில் அந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இராஜராஜ சோழன் எதையும் சிறியதாகச் சிந்தித்தது இல்லை. அவன் கட்டியிருக்கிற கோயில் பெரிய கோயில். அங்கே இருக்கிற சிவபெருமான் பெருவுடையார். எல்லாவற்றையும் பெரிதாகச் சிந்திக்கிறவன் தமிழன் என்பதற்குத் தமிழ்ச் சமுதாயமும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த மண்ணில் வாழ்ந்தவன் இராஜராஜ சோழன்.

இங்கே கட்டுரைகள் படிக்கிறார்கள். தமிழுக்கு ஆய்வு நடத்தப்படுகிறது. தமிழ் வளர்ச்சிக்கு உள்ள பணிகள் இங்கே பேசப்படுகின்றன. இனி தமிழுக்குரிய பொற்காலம், சங்ககாலத்தில் என்று மட்டும் இருந்த வரலாறு திருத்தி எழுதப்பட்டு, சங்க காலம் மட்டும் அல்ல, மனித நேயம் கொண்ட புரட்சித்தலைவியின் காலமும் தமிழுக்குப் பொற்காலம்தான் என்பதை இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் தோன்றினாலும் மறையப் போவதில்லை.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்', என்று அண்ணாவால் வகுத்தாளப்பட்ட திருமூலத் திருமந்திரத்தைத் தந்த பெருமை தமிழன்னையைச் சேரும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வாசகத்தை அகில உலகத்திலும் ஐ.நா. சபையிலும் பொறிக்கப்பட வேண்டிய சொற்றொடர் என்று உலக அறிஞர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமா? எது பண்பு? எது வாய்மை? எது வாழ்க்கையினுடைய உண்மைத் தத்துவம்? என்பதைப் புரிந்து கொண்டு, இந்த உலகத்திற்கு அன்றே வழங்கியவன் தமிழன்.

'தமிழன் என்றொரு இனம் உண்டு. தனியே அவர்க்கொரு குணம் உண்டு' என்று நாமக்கல்





# பாரதியின் தமிழ்ப் பற்று!

ஆங்கிலம், வடமொழி போன்ற பல மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த பாரதியார், “யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல், இனிதாவ தெங்கும் காணோம்”, என்று செம்மாந்து பாடியுள்ளது, ஆராய்ச்சி அறிவை ஆதாரமாகக் கொண்டு, திறனாய்வு அடிப்படையில் நிலைநாட்டப்படக்கூடிய தெளிவான தீர்ப் பேயாகும்.

1915-ஆம் ஆண்டு ஜூலையில் புதுச்சேரியிலிருந்து தம் நண்பர், பரலி சு. நெல்லையப்பருக்குப் பாரதியார் எழுதிய கடிதத்தில் “தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தமிழனைவிட மற்றொரு ஜாதியான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு ஸம்மதமில்லை” என்று தமிழையும், தமிழனையும் உயர்த்துவதில் அவருக்கிருந்த வேட்கையை, ஏன், உணர்ச்சி வெறியையே, வெளிப்படுத்தினார்.

தமிழ் என்பது ஒரு மொழி மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை வழி, அற நெறி, இலட்சியப் பாதை என்று அவர் நம்பியதால் தான், தகைமைசால் வாழ்வு வாழ, தரும நெறி நின்று தழைக்க, தமிழ்க்காதல் வழிகாட்ட வேண்டுமென்று அவர் துடித்தார்.

பண்டைத் தமிழ் வரலாற்றில் மண்டிக் கிடந்த பெருமைகளை அவர் துய்த்துத் தொழுத நேரத்திலே, காலத்துக்கு ஏற்ற ஓட்டம் பெற்று, வளர்ச்சிக்கொத்த வலிவு அடைந்து, புதுமைக்குரிய பொலிவு எய்தி, பூரண ஞானமும் புரட்சி எண்ணமும் பின்னிப் பிணைய, தமிழ்மொழி தழைத் தோங்கி, தற்கால மொழியின் தகுதியை வளர்த்து, எக்காலத்துக்கும் உரிய மொழி யென ஏற்றம் பெற வேண்டுமென, எழுச்சி கொண்டார்.

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும், இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்” என்று அவர் பாடிய போது, பழம்பெருமையில் மட்டும் பதிந்து நின்றுவிடாமல், படைப்பு இலக்கியங்களில் பல புதுமைகளைக் கண்டு, உலக வளர்ச்சியால் அறிவின் எல்லைக் கோடுகள் விரிவடைவதற்கேற்ப, மொழியின் வல்லமையையும் வளத்தையும் வளர்க்க வேண்டும் என்பதை அறிவுறுத்தினார்.

—‘தேசியம் வளர்த்த தமிழ்’ என்னும் நூலில், திரு. கா. திரவியம்.


---

கவிஞர் பாடினார். என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? அந்தத் தனிக்குணம் என்னவென்றால், எவனுக்கும் தலை வணங்க மாட்டான். ஆனால், அவன் ஆணவத்தோடு என்றும் வாழமாட்டான். அடக்கத்தோடு இருப்பான். அவன் எவனுக்கும் அடிமையாக இருக்கமாட்டான்.

பிறருக்கு வழிகாட்டுவானே தவிர, தான் பிறர் காட்டிய வழியில் ஒரு போதும் சிக்கிக் கொண்டு அல்லல்பட மாட்டான். அந்த அமைப்பிலேதான் இன்றும் தமிழ்ச் சமுதாயத்தில், தமிழகத்தில் புதியதோர் பொற்காலம் படைத்து வரும் புரட்சித் தலைவி இந்த நாட்டிற்கே வழிகாட்ட வேண்டும் என்று மற்ற மாநிலத் தலைவர்கள் கேட்கின்ற அளவுக்கு உயர்ந்து இருக்கிறார்கள்.

எனவே, பொருளால், புகழால், அருளால், ஆற்றலால், வணிகத்தால், வாழ்வால், வீரத்தால், விவேகத்தால், உயர்வு பெற்ற இந்தத் தமிழையும் தமிழ்ச் சமுதாயத்தைப் போல் காலத்தால் அழியாத காவியமாகப் புரட்சித்தலைவியின் புகழும் விளங்கும் எனக்கூறி, ‘தமிழுக்கு அமுதென்று பேர்’ எனப் பாடினார் பாரதிதாசன். அவர் இப்போது இந்த எழில்மிக்க மாநாட்டைப் பார்த்திருந்தால் தமிழுக்கு அமுதென்று பேர், தமிழமுதுக்குப் புரட்சித்தலைவி என்று பேர் எனப் பாடியிருப்பார் எனக் கூறி ‘எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு’ எனக் கூறி உரையை நிறைவு செய்கிறேன்.

# படமும் செய்தியும்



மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, தலைமைச் செயலகத்தில், மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை இணை அமைச்சர் திரு சதீஷ்சர்மா அவர்கள், சந்தித்துப் பேசினார். (8.2.95)

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, பம்பாயில், தென் ஆப்பிரிக்கத் தூதராக இருக்கும் திரு ஜேக்கியூஸ் கிரிஸ்டோப் நேவ்வாஸ் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். அப்போது அவருக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார். (8.2.95)



# அரசின் சாதனைகளை விளக்கும் அற்புதப் பொருட்காட்சி

☆ அரசின் சாதனை விளக்கம்.

☆ மத்திய-மாநில அரசுகளின் அரங்குகள்.

☆ மழலைகள் மகிழும் 'எம்.ஜி.ஆர் குழந்தைகள் உல்லாச உலகம்'!

☆ இசைக்கு ஏற்ப நடனமிடும் கண்கவர் வண்ண நீரூற்று!

☆ நாள்தோறும் கலை நிகழ்ச்சிகள், திரைப்படங்கள்!

இவை போன்ற பல்வேறு அற்புதக் காட்சிகளை, சென்னைத் தீவுத்திடலில் நடைபெற்று வரும் அகில இந்திய 21-வது சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் கண்டு மகிழலாம்.

**கவின்மிகு காவல்துறை அரங்கு**

பிரம்மாண்டமான முகப்பினைக் கொண்டு நம்மை வரவேற்கும் இப் பொருட்காட்சியில், 22 அரங்குகள் அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ளன. முதலில் காவல்துறை அரங்கு, காவல் நிலையம் போல் கம்பீரத் தோற்றத்துடன் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவ்வரங்கினுள் எச்சிரிக்கை ஒலி எழுப்பும் மின் இயக்க ஒலிக் கருவியும், தடய அறிவியல் மற்றும் சென்னை மாநகரப் போக்குவரத்துக் காவல் பிரிவும் பாங்குற அமைந்துள்ளன. மேலும், இவ்வரங்கில் காவல்துறையினர் பெற்றிருக்கும் பரிசுக் கோப்பைகளும், நவீன ரகத் துப்பாக்கிகளையும், நவீன கணிப்பொறித் திட்டமும், புதிய காவல்துறைத் தலைவர் அலுவலகக் கட்டட மாதிரி வடிவமும், காவல்துறை ஆற்றிவரும் சீர்மிகு பணிகளும், குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் நவீன முறையும் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன.



**கூட்டுறவு மலர்ந்த தமிழகம்**

கூட்டுறவுத்துறை அரங்கில் 'கூட்டுறவு மலர்ந்த தமிழகம்' என்ற பிரிவில் மாநிலத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவு நிலையங்களை அழகுபட வரைபடத்தில் காண்பித்து இருப்பது, கூட்டுறவில் தமிழகம் தனக்கென்று ஓர் இடத்தைத் தக்கவைத்துக் கொள்கிறது. மேலும், மகளிர் மேம்பாடு, சிறுதொழில் கடன், மலைவாழ் பழங்குடியினர் நலம், டாக்டர் ஜெ. ஜெயலலிதா நலிவுற்றோர் தொழில் கடன், ஆகிய விவரக் குறிப்புகள் காண்பவரைக் களிப்படையச் செய்யும்.

1992-93-ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட சிறுதொழில் கடன் ரூ.151.93 கோடி, ஆனால் 1994-95-ஆம் ஆண்டு இரண்டு இலட்சம் நபர்களுக்கு இலக்கு நிர்ணயித்து இருப்பது, தமிழகம் கூட்டுறவில் அரிய சாதனை படைத்துள்ளது எனப் பொது மக்கள் அறியும் வண்ணம் உள்ளன. இவ்வரங்கின் முகப்பில், 'நியாய விலைக் கடை மற்றும் கூட்டுறவு வங்கி போன்று தத்ரூபமாக வடிவமைத்து உள்ளனர்.

**தெய்வீக மணம் கமழும் திருக்கோயில்!**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அரங்கில், சென்னை பார்த்த சாரதி கோயில் தேர் வடிவமுகப்பானது, பக்திப் பரவசமூட்டும் வகையில் எழுந்துள்ளது. இவ்

வரங்கில் தெய்வீக மணம் கமழும் வகையில் தமிழகத்தில் உள்ள அறுபடைவீடுகள், பஞ்சமுக வாத்தியம், பிரசித்தி பெற்ற திருக்கோயில்கள் இடம் பெற்றுள் ளன. சென்னை நகரில் **1991** முதல் திருப்பணி முடிந்து, குடமுழுக்கு நடத்தப்பட்ட திருக்கோயில்களின் விவரப் பட்டியல் இடம் பெற் றுள்ளன. அவை:

1. அருள்மிகு திருவட்டீஸ்வரர் திருக்கோயில், சென்னை.

2. அருள்மிகு வெங்கடேசப் பெருமாள், திருக்கோவில், பைராகிமடம், சென்னை.

3. அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில், சென்னை.

4. அருள்மிகு சிவசுப்பிர மணியசுவாமி திருக்கோயில், சென்னை.

5. அருள்மிகு பாரதீஸ்வரர் திருக்கோயில், கோடம்பாக்கம்.

6. அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், சென்னை.

7. அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயில், சென்னை.

8. அருள்மிகு முண்டகக் கண்ணி அம்மன் திருக்கோயில், சென்னை.

**சீர்மிகு செய்தித்துறை அரங்கு**

செய்தி-மக்கள் தொடர்புத் துறை அரங்கில், மாண்புமிகு முதல்வர் பங்கேற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் புகைப்படங்கள், அண்ணல் அம்பேத்கர், மேயர் சிவராஜ், கவியரசு கண்ணதாசன் போன்ற திருவுருவச் சிலைகளின் திறப்பு விழா, புகைப்படங்களும், மகாகவி சுப்பிரமணிய பாரதி யாரின் நினைவு இல்லத் திறப்பு விழா நிகழ்ச்சியின் புகைப் படங்களும், அழகுற அமைக்கப் பட்டுள்ளன.

மாண்புமிகு முதல்வர் விளையாட்டுத் துறையில் தனி ஆர்வம் செலுத்தும் வகையில் அமைத்த ரூ.45 கோடி செலவில் 7 1/2 மாதங்களுக்குள் உருவாக்கப் பட்ட நேரு விளையாட்டரங்க நிகழ்ச்சியின் புகைப்படத் தொகுப் பும், டாக்டர் ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர் தொடக்க விழா வின் புகைப்படங்களும், தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பர விடச் செய்த எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சிகளின் புகைப்படமும் பாங்குற மிளிர் கின்றன. மேலும் மாண்புமிகு முதல்வர் கலந்து கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் புகைப்ப டங்களும் இதில் இடம் பெற்றுள் ளன.

**விவசாயப் புரட்சி!**

வேளாண்மைத் துறை அரங் கில், சிறுதானியப் பயிர்களைக் கொண்டு, மாண்புமிகு முதல்வர் உருவமும், தஞ்சைக் கோபுரத்தின் மாதிரி வடிவமும் உருவாக்கி யிருப்பது நம்மைப் பிரம்மிக்க வைக்கிறது. வேளாண்மைத் துறை யில் புரட்சிகரமான திட்டங்




களான 'மகராசி வேளாண்மை 2000' என்ற திட்டமானது:

1. நீடித்த நிலையான வேளாண்மை.

2. சீர்மிகு நீர் மேலாண்மை.

3. பயிர்த் தொழிலுடன் பலன்தரும் பக்கத் தொழில்கள்.


4. உற்பத்திச் செலவுக்கு உரிய, நெறிய விலை.

5. வெற்றி தரும் வளர்ச்சிக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்பு.

6. ஆக்கம் தரும் வேளாண்மை யில் அறிவியல் பொறிகளின் பணி.

7. வேளாண்மை விளைப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் அங்காடி.

8. காய்கறி விளைச்சலில் கணிசமான பெருக்கம்.






9. விதை உரிமைகளும் வேண்டிய பல்லுயிர்ப் பெருக்கமும்.

மற்றும் ஜெ.ஜெ. 92 வகை நெல், எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு நெல் போன்றவைகளின் திட்டச் செயல்பாடுகள் காண்பவரைக் களிப்படையச் செய்யும்.

**மனத்தைக் குளிர வைக்கும் குடிநீர் வாரியம்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அரங்கில் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில், தமிழகத்தின் முக்கிய நகரமான கோவைக்கு, 20 பேரூராட்சிக் கிராமக் குடியிருப்புகளுக்கும், சேலம் நகரில் 264 வழியோரக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தின் விவரமான மாதிரி வரைபடம் இடம் பெற்று காண்பவர் மனதைக் குளிர வைக்கின்றது. இவ்வரங்கின் முத்தாய்ப்பாகப் பாரத மிகுமின் நிறுவனம் அமைத்துள்ள உப்பு நீரைக் குடிநீராக்கும் இயந்திரமும் வைக்கப்பட்டுள்ளன.

**எழில்மிகு சென்னை-2000**

சென்னை மாநகராட்சி அரங்கு, தூய்மை, பசுமை அறிவாண்மை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் 'எழில்மிகு சென்னை 2000' என்ற வீதத்தில் பாங்குற அமைந்துள்ளன. மேலும் சென்னைக் குடிநீர் நடமாடும் பரிசோதனைக் கூட ஊர்தியும் நிறுத்தப்பட்டு, அதன் பணிகளையும் விளக்குகிறார்கள்.

**கல்வி கரையில...**

கல்வித்துறை அரங்கில், அறிவொளித் திட்டத்தின் மேன்மையையும், அதன் சீரிய பணிகளையும் விளக்குவதோடு மட்டுமல்லாமல், புலவர் திட்டம், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகப் பிரிவு, பொது நூலகத்துறை பிரிவில் பழங்கால ஓலைச் சுவடிகள், சிந்துவெளிப் பட எழுத்து, எகிப்தியப் பட எழுத்து, சுமேரியர் குறியீடு போன்றவைகள் வைக்கப்பட்டுள்ளன. விளையாட்டுத் துறையின் சார்பில் அக்கால அம்மானை விளையாட்டு முதல் தற்கால ஒலிம்பிக் பந்தயங்கள் வரை ஒப்பிட்டுப் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். மொத்தத்தில் கல்வி முடிவில்லாதது என்ற சொற்றொடர் நம் மனதில் நீங்கா இடம் பெறுகின்றன.


**பல்வேறு துறைகளின் பாங்கான பணிகள்**

சமூகநலத்துறை அரங்கில் மகளிர் வாழ்வு மலர எண்ணற்ற திட்டங்களும், குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணிக்க எடை அட்டவணைப் பரிசோதனையும் 'சிடா' திட்டமும், ஊட்டச் சத்தின் மேன்மையும் நம் கண் முன்னே நிறுத்துவது போல் உள்ளன.

இதைத் தவிர தொழிலாளர் நலத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, பிற்பட்டோர் நலத்துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, போக்குவரத்துத் துறை, வனத்துறை, பொதுப்பணித்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, வீட்டு வசதித்துறை, கைத்தறித்துறை, சுற்றுலாத் துறையில் மாநிலத்தில் உள்ள முக்கியச் சுற்றுலா மையங்களின் புகைப்படங்களும், குறிப்பேடுகளும் இடம் பெற்றுள்ளன. மேலும், பல அடுக்கு மாடிகளின் வடிவம் கொண்ட வீட்டுவசதித் துறையும், மாசுக் கட்டுப்பாடு வாரியமும், மீன்துறை போன்ற துறைகள் திறம்பட தங்களது திட்டங்களும், செயல்பாடுகளும் பொதுமக்கள் அறியும் வண்ணம் அமைத்துள்ளன.


**மாவட்ட அரங்குகள்**

23 மாவட்டங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளில் தமிழக அரசின் சாதனை விளக்கங்களும், மாண்புமிகு முதல்வர் கலந்துகொண்ட புகைப்படத் தொகுப்புகளும் இடம் பெற்றிருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். இதில் விவேகானந்தர் பாறை போன்று வடிவமைக்கப்



பட்ட கன்னியாகுமரி மாவட்டம் அழகுற உள்ளது. இம்மாவட்ட அரங்கினுள் மாவட்ட வளர்ச்சிப் பணிகளும், அரசின் சாதனைகளும் இடம் பெற்றுள்ளன. இதைப்போன்று வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் முகப்பு கம்பீரத் தோற்றத்துடன் உள்ளது. இதில் கரிகிரி மண்பாண்டங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அடுத்து, பெரியார் மாவட்டத்தின் மாவட்ட வளர்ச்சிப் பணிகளும், ஊரக வளர்ச்சித் திட்ட முகமையின் செயல்பாடுகளும் இடம் பெற்றுள்ளன. மாமல்லபுரம் வடிவம் கொண்ட செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டமும், மலைக்கோட்டை வடித்தினைக் கொண்ட திருச்சிராப்பள்ளி மாவட்டமும் சிறப்பாக உள்ளன. இதைத் தவிர இராமநாதபுரம் மாவட்டத்தில் அம்மாவட்ட வளர்ச்சிப் பணிகளும், அன்னை இந்திரா காந்தி பாலம் (பாம்பன் பாலம்)மாதிரி வடிவமைப்பு இடம் பெற்றுள்ளன. அரசின் சாதனைகளும் இடம் பெற்றுள்ளன. இதைத்தவிர மற்ற மாவட்ட அரங்குகளும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இப் பொருட்காட்சியில் வெளிமாநிலங்கள் சார்பில் 4 அரங்குகள் இடம் பெற்றுள்ளன.



மத்திய அரசின் இரயில்வே துறையானது, கடற்கரையிலிருந்து லஸ் வரை செல்லும் பறக்கும் இரயிலின் மாதிரியை நம் கண் முன்னே ஓட வைத்துக் காட்டுகின்றனர். இதேபோல் ராஜதானி மிக விரைவு இரயிலையும் வடிவமைத்து ஓட வைத்திருப்பது பார்ப்பவரைப் பரவசமடையச் செய்கிறது.

**பொழுதுபோக்கு அம்சங்கள்**

இப்பொருட்காட்சியில் மற்றொரு சிறப்பு அம்சமாக இருப்பது "மழலைகள் மகிழும்" எம்.ஜி.ஆர். குழந்தைகள் உல்லாச உலகம்" ஆகும். இந்த உல்லாச இடத்தில் குழந்தைகள் விளையாடுவதற்கென 50 வகையான விளையாட்டுக் கருவிகளும், மக்கள் நல்வாழ்விற்குக் கேடு விளைவிக்கும் மது அருந்துதல், புகைபிடித்தல் போன்ற பழக்கங்களைக் கொண்டுள்ள மனிதன் எவ்வாறு சீரழிந்து போகின்றான் என்பதை விளக்கும் 'உருகும் மனிதன்' போன்ற நிகழ்ச்சியும், இடம் பெற்றுள்ளன. இந்த நிகழ்ச்சியைக் காண மக்கள் கூட்டம் அலைமோதிய வண்ணம் இருக்கிறது. மேலும் இவ்வரங்கில் திரைப்படத்தில் வரும் சண்டைக் காட்சிகள் எப்படி அமைக்கப்படுகின்றன என்பதைச் சித்திரிக்கும் வண்ணம், வீரர்கள் மோதுகின்ற சண்டைக்காட்சிகள், தமிழர்களின் வீரவிளையாட்டு, கராத்தே, பொம்மலாட்டம், காவடி, மயிலாட்டம், கரகாட்டம், மேஜிக், பல குரலில் பேசும் நகைச்சுவைக் காட்சிகள் போன்றவை இடம் பெறுகின்றன. இசைக்கேற்ப நடனமிடும் வண்ண நீரூற்று பார்ப்பவரைப்பரவசமடையச் செய்யும்.



அறிவுக்கு விருந்தாக எம்.ஆர்.எல். நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள, அரங்கின் மேல் உள்ள 'இயந்திர மனிதன்' நம்மைக் கவர்கிறான் மற்றும் இப்பொருட்காட்சியில் மகளிருக்குத் தேவையான ஆடை, ஆபரணக் கடைகள் சுமார் 200-க்கு மேல் அமைந்துள்ளன. மேலும், மிகக் குறைந்த விலையில் கைவினைப் பொருட்கள், கைத்தறித் துணிகள் மற்றும் குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் கடைகளும் இடம் பெற்றுள்ளன. நம் கண்ணைப் பறிக்கும் வகையில் விண்ணைத் தொடும் ராட்சதப் பலூன் குழந்தைகளுக்குக் கண்கொள்ளாக் காட்சியாகும். குழந்தைகள் விளையாட ராட்டினங்களும் உண்டு. பாம்புப் பண்ணையும் இடம் பெற்றுள்ளன.

மீன்காட்சி அரங்கு வியத்தகு வகையில் உள்ளது. வீட்டில் வளர்க்கப்படும் மீன்களும், கடல் வாழ் உயிரினங்களும், நூற்றுக் கணக்கில் வண்ண வண்ண மீன்களும் இங்குப் பாங்குற இடம் பெற்றுள்ளன. யானை மற்றும் டயனோசர் மிருகம் பொம்மையும் அதனுடன் குட்டி டயனோசர்

பொம்மையும் நம்மை மகிழ்விக்கின்றது. குழந்தைகள் மகிழ மின்சார இரயிலும் உண்டு.

இப்பொருட்காட்சி ஜனவரி முதல் ஏறத்தாழ 3 அல்லது 4 மாதங்கள் நடைபெறுவதால் ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கின்றது. மேலும், 2 ஆயிரம் கலைஞர்களுக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு 40 இலட்சம் பேர் இப்பொருட்காட்சியைக் கண்டுகளித்தனர். அதன்மூலம் ரூ.1.15 கோடி வருவாய் கிடைத்தது. இவ்வாண்டு 50 இலட்சம் பேர் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொருட்காட்சியில் தோட்டக் கலைக் கண்காட்சி, மகளிர் தினம், உணவுக் கண்காட்சி போன்ற சிறப்புக் காட்சிகளும் அனைவரையும் மகிழ்வித்தன.










இதேபோல நாய்க்கண்காட்சியும் நம்மைக் கவர்ந்தது. வி.ஜி.பி. நிறுவனமும், தமிழ்நாடு சுற்றுலாத்துறையும் இணைந்து இக் கண்காட்சியை நடத்தின. இந்தக் கண்காட்சியில் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, புதுடெல்லி போன்ற பல மாநிலங்களிலிருந்து நாய்கள் கலந்து கொண்டன. நாய்களின் வீர விளையாட்டுகளும், அணிவகுப்பும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.

தினமும் பகல் 3 மணியிலிருந்து இரவு 9.30 மணி வரையிலும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 11 மணி முதல் இரவு 10 மணி வரை பொருட்காட்சியைக் காணலாம். பொருட்காட்சிக்குப் பொதுமக்கள் வந்து செல்ல, பல்லவன், டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகங்கள் சிறப்புப் பேருந்துகளை இயக்குகின்றன.

இப்பொருட்காட்சி, பொழுது போக்கிற்கு மட்டுமல்லாமல், அறிவை வளர்க்கும் கலைக்கூடமாகவும், அரசின் சாதனைகளை விளக்கும் அழகிய, அற்புதக் காட்சி அரங்குகளாகவும் விளங்குகின்றன என்றால் அது மிகையல்ல!

**–அ. மதிமாறன்**

# திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில், அரசின் சாதனைகள், திட்டங்கள் விளக்கிடும் பல்துறைப் பணி விளக்க முகாம்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில், அரசின் சாதனைகள், திட்டங்களை விளக்கிடும் வகையில் கடந்த 30.1.95 முதல் 5.2.95 முடிய பல்துறைப் பணிவிளக்க முகாமானது திண்டுக்கல் டட்லி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இம்முகாமில் பல்வேறு அரசுத் துறையினர், தங்கள் துறையின் செயல்பாடுகள், பொதுமக்கள் பயன் பெற அணுகுமுறைகள், திட்டங்கள், சாதனைகள் ஆகிய வற்றை விளக்கி உரை ஆற்றினார்கள்.

நேரு இளைஞர் மன்றத்தினரின் ஒயிலாட்டம், கரகம், காவடி, தேவராட்டம் முதலியன நடந்தன. மற்றும் தொழுநோய்ச் சிகிச்சை, சுகாதார முறை ஆகியவற்றை விளக்கிடும் நாடகங்கள் நடந்தன.


மருத்துவ முகாம் மற்றும் தொழுநோய்ச் சோதனை முகாம் நடைபெற்றது.

அரசின் சாதனைகளை விளக்கிடும் வகையில், 14 ஊராட்சி ஒன்றியங்களில் நாள்தோறும் மூன்று படக்காட்சிகள் வீதம், 42 வீடியோ வாகனப் படக்காட்சிகள் நடத்தப்பட்டன.

மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களில், நாள்தோறும் மத்திய அரசு விளம்பரத் துறை மற்றும் அரசுத் துறையின் மூலம் நாடகம், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க முகாமினை, மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர், திரு எஸ். காந்திராஜன், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உடன் உள்ளனர்.



**வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் வேலூரில் நடைபெற்ற அரசுப் பொருட் காட்சியினை, மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துணிநூல் துறை அமைச்சர் புலவர் ஆர். இந்திரகுமாரி அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ம.ப. விஜயகுமார், இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர். (3.2.95)**

# தஞ்சை சரஸ்வதி மகால்

"தஞ்சை சரஸ்வதி மகால் உலகத்திலேயே உள்ள நூலகங்களில் மிகப் பெரியதும், மிகவும் முக்கியமானதும் ஆகும்" என்கிறார் டாக்டர் ஏ.சி. பர்னெல் என்ற ஜெர்மன் நாட்டு அறிஞர்.

இந்நூலகத்தில் 30,000 நூல்கள் சமஸ்கிருத மொழியில் உள்ளவை. 5,000 மராத்திய மொழியிலும், 2,500 தெலுங்கு மொழியிலும், 2,000 தமிழிலும், 500 பிற மொழிகளிலும் உள்ளன. பிற மொழி நூல்களில் லத்தீன், பிரெஞ்சு, இத்தாலி, ஜெர்மன், கிரேக்க மொழிகள் அடங்கும்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் உள்ள ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், நூல்கள் ஆகியவையும் 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குறளைப் பற்றிய சுவடி தமிழிலுள்ளவற்றில் முக்கியமானதும், தொன்மையானதாகும். இந்த நூல்களின் பட்டியல்களை 1884-ஆம் ஆண்டில் முதன்முதலாகத்தயாரிக்கத் தொடங்கியவர் டாக்டர் பர்னல் ஆவார். அவர் தயாரித்த முதல் பட்டியல் இலண்டன் மாநகரில் வெளியிடப்பட்டது.

1949 முதல் 1964 வரை சுமார் 130 கையெழுத்துப் பிரதிகள் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

இங்குள்ள ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றியவையாகும். அவை:

1. வேதங்கள், வேதங்களின் தத்துவம், காவியங்கள்.

2. புராணங்கள், இதிகாசங்கள்.

3. இசை, நுண்கலைகள், சிற்பம்.

4. மந்திரம்

5. சித்த ஆயுர்வேத மருத்துவ நூல்களாகும். மேலும் மருத்துவம் சம்பந்தப்பட்ட நூல்களும் ஏராளமாக உள்ளன.

தொல்காப்பியம்- சொல்லதிகாரம், நச்சினார்க்கினியம், இலக்கண நூலும், நாட்டிய சாஸ்திர சங்க்ரஹம், நாட்டியத்திற்கான சாகித்திய வகைகள், பரதார்வணவம், போன்ற நாட்டிய சாத்திரம் பற்றிய நூல்களும், தாளசமுத்திரம், ராக ஆலாபனைகளும், லயங்களும் போன்ற இசை நூல்களும், பின்னல் கோலாட்டம் என்ற கோலாட்ட வகைகள் பற்றிய நூலும், மானசாரம், சிற்பரத்தினம், மயமதம் போன்ற சிற்பக் கட்டடக்கலை நூல்களும் வெளியிடப் பட்ட பிற நூல்களாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA.7556.95

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

